# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 393

சனி, 30 மே, 2026 |

பக்கங்கள் 18

www.ilakku.org










# மீளவும் போராடத் தயாராகும் கேப்பாப்புலவு மக்கள்!



முல்லைத்தீவு – கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்குமாறு தொடர்ந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்த போதும் இதுவரையில் அந்த மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. முல்லைத்தீவு – கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள 55 பொதுமக்களின் காணிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடிதமொன்றினை அனுப்பிவைத்திருந்தார்.

குறிப்பாக கேப்பாப்புலவு காணிவிடுவிப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட (2026.01.14 ஆம் திகதி) கடிதத்திற்கு அமைவாக, கடந்த11.03.2026ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கான பிரதியுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு PS/DA/SAD/06/41-Vol.01 இலக்கமுடைய கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் அவ்வாறு ஜனாதிபதி செயலகத்தினால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட அக்கடிதத்தின் மூலம், கேப்பாப்புலவு காணிவிடுவிப்புத்தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் சிரேஸ்ட உதவிச் செயலாளரால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு 19.05.2026 ஆம்திகதி கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**தொடர்ச்சி: பக்கம் 14**

## ஏழைகளின் பட்டியலில் சேர்க்கப்பட்ட மஹிந்த ராஜபக்ச!



தேசிய வீட்டுவசதி அதிகார சபையின் உத்தியோகபூர்வ நிலக்கொள்கைகளை மீறி, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு முறைகேடான வழிகளில் அரச காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுதத்பல கல்ல பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுவாக வீட்டுவசதி அதிகார சபையின் நிலக் கொள்கையின்படி, நாட்டில் வாழும் குறைந்த வருமானம் பெறும் ஏழைக் குடும்பம் ஒன்றிற்கு ஒரு காணி மாத்திரமே வழங்க முடியும் என்ற கடுமையான சட்ட விதிமுறை நடைமுறையில் உள்ளது.

ஆனால், கடந்த 1999 ஆம் ஆண்டில் அப்போதைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு ஏக்கர் அரச நிலம் தாராளமாக வழங்கப்பட்டுள்ளது என்று சுதத் பலகல்ல சுட்டிக்காட்டியுள்ளார். "அவர் ஒன்றும் காணி

**தொடர்ச்சி: பக்கம் 14**

## யாழ். வலி. வடக்கு மக்கள் போராட்டம்!




இலங்கையில் பல பகுதிகளிலும் வெசாக் கொண்டாட்ட கொடிகள் பறக்கப் படவிடப்பட்டுள்ள நிலையில், மயிலிட்டி பகுதியில் தமது காணிகளில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என கோரி கறுப்புக்கொடிகளை பறக்க விட்டு காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வலி. வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி , காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமோண்டோ " பங்களா முன்பாக நேற்றைய தினம் (29) ஆறாவது வெள்ளிக்கிழமை போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் தங்களின் சொந்த

**தொடர்ச்சி: பக்கம் 15**

# எபோலாவால் 220 பேர் இறப்பு - பயணம் கட்டுப்பாடுகள்விதிப்பு





காங்கோ ஜனநாயகக் குடியரசு (டி.ஆர்.சி) மற்றும் உகாண்டாவில் எபோலா வைரஸின் ஒரு அரிய வகை சமீபத்தில் பரவியுள்ளது. இந்த நோய் பரவுவதைத் தடுக்கும் முயற்சியில் பல அரசாங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. மே 15 அன்று கின்ஷாசா இந்த நோய் பரவலை அறிவித்ததிலிருந்து, டி.ஆர்.சி-யில் கொடிய புண்டிபுக்யோ (பி.வி.டி) வகை எபோலாவால் 220 பேர் இறந்திருக்கலாம் எனவும், 900 பேர் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனவும் உலக சுகாதார அமைப்பு (WHO) பதிவு செய்துள்ளது. உகாண்டாவில், ஐந்து பேருக்கு நோய் இருப்பதும், ஒருவர் இறந்திருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

உகாண்டாவும் காங்கோ ஜனநாயகக் குடியரசுக்கு (DRC) உள்ளேயும் வெளியேயும் பயணம் செய்வதற்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அனைத்து நேரடி விமானங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன, அதே நேரத்தில் பேருந்து மற்றும் படகு எல்லைக் கடப்புகள் நான்கு வாரங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளன. எல்லை மாவட்டங்களில் உள்ள வாராந்த சந்தைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், சரக்கு போக்குவரத்து, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவை எல்லையைக் கடக்க இன்னும் அனுமதிக்கப்படுகின்றன.

**தொடர்ச்சி: பக்கம் 15**

## அவுஸ்ரேலியாவில் அமெரிக்க அணு ஆயுதங்கள்



அவுஸ்ரேலியா எதிர்காலத்தில் அமெரிக்க அணு ஆயுதங்களைத் தன்வசம் வைத்திருக்கக்கூடும் என ரஷ்யப் பாதுகாப்பு மன்றச் செயலாளர் செர்ஜி ஷோய்கு எச்சரித்துள்ளார். ஆயுதங்களை நிலைநிறுத்துவதற்கான இடங்களாக ஜப்பான் மற்றும் தென் கொரியாவையும் வாஷிங்டன் கருத்தில் கொண்டுள்ளதாக அவர் புதன்கிழமை(27) நடைபெற்ற ரஷ்யா-ஆசியான் கூட்டத்தில் தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவம், அடுத்த மாத தொடக்கத்திலேயே தென்மேற்கு ஜப்பானில் நடைபெறும் வாலியன்ட் ஷீல்ட் மற்றும் ஓரியன்ட் ஷீல்ட் கூட்டுப் பயிற்சிகளுக்காக டைஃபான் ஏவுகணை அமைப்புகளை நிலைநிறுத்தக்கூடும். இந்த அமைப்புகள், அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்ட டோமஹாக் ஏவுகணைகளைச் செலுத்துவதற்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. மாஸ்கோவில் உள்ள ஜப்பானியத் தூதரகம், பயிற்சிகளுக்குப் பிறகு டைஃபான் அமைப்பு ஜப்பானில் உள்ள ஒரு அமெரிக்கத் தளத்தில் "சேமிக்கப்படும்" என்றும், இது "நிரந்தர நிலைநிறுத்தம்" ஆகாது என்றும் கூறியுள்ளது.

"ஜப்பானும் கொரியக் குடியரசும் தங்கள் மண்ணில் அமெரிக்க அணு

**தொடர்ச்சி: பக்கம் 16**

## சவப்பெட்டியில் அடைத்து வைத்து துஷ்பிரயோகம்



இஸ்ரேலிய தடுப்புக்காவல் நிலையங்களில் அதிகரித்து வரும் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், தகவல் அளிப்பவராக மாற மறுத்ததால், இஸ்ரேலியப் படைகள் தன்னை இரண்டு வாரங்களுக்கும் மேலாக சவப்பெட்டி போன்ற ஒரு பெட்டியில் அடைத்து வைத்திருந்ததாக ஒரு பாலஸ் தீனியர் தெரிவித்துள்ளார்.

இமான் நப்ஹான், "உள்ளே ஒரு மரப்பெட்டியுடன் கூடிய இரும்புக் கொள் கலனில்" தான் வைக்கப்பட்டிருந்ததாகவும், அங்கு தனது கைகளும் கால்களும் கட்டப் பட்டிருந்ததாகவும் கூறினார். தனது தடுப்புக்காவலின் போது, இஸ்ரேலியப் பணியாளர்கள் ஒரு துளை வழியாக தனக்கு உணவளித்ததாகவும், கழிப்பறைக்குச் செல்ல வேண்டிய போதெல்லாம் ஒரு நிமிடத்திற்கு மட்டும் தன்னை வெளியே விட்டதாகவும் அவர் கூறினார்.

**தொடர்ச்சி: பக்கம் 14**

## ஐக்கிய இராச்சியத்திலிருந்து சுதந்திரம் பெறுவது குறித்த புதிய வாக்கெடுப்பு



ஐக்கிய இராச்சியத்திலிருந்து சுதந்திரம் பெறுவது குறித்த புதிய பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஸ்காட்லாந்து நாடாளுமன்றம் ஆதரவளித்துள்ளது. லண்டனுக்கு விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோளுக்கு ஆதரவாக 72 உறுப்பினர்களும், எதிராக 55 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

பொது வாக்கெடுப்பை ஏற்பாடு செய்வதற்கான அதிகாரங்களை ஸ்காட்லாந்து நாடாளுமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்பதே இங்குள்ள முக்கியப் பிரச்சினையாகும். ஐக்கிய இராச்சியத்திலிருந்து இப்பகுதி பிரிந்து செல்வதை ஆதரிக்கும் ஸ்காட்லாந்து தேசியக் கட்சியின் (SNP) தலைவரும், ஸ்காட்லாந்தின் முதல் அமைச்சருமான ஜான் ஸ்வினிதான் இந்த முன்னெடுப்பைத் தொடங்கினார்.

**தொடர்ச்சி: பக்கம் 15**

# இனப்படுகொலையின் சாட்சியங்கள் வேதனையானது - ஆண்ட்ரூ சார்ல்டன்

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னக் கூட்டம் நமது சமூகத்திற்கு ஒரு முக்கியமான மற்றும் ஆழ்ந்த அர்த்தமுள்ள தருணமாகும். இது நாம் இழந்தவர்களை நினைவுகூரவும், அவர்களுக்கு மரியாதை செலுத்தவும், நமது மக்களின் வலி, மனவுறுதி மற்றும் வரலாற்றைப் பற்றி சிந்திக்கவும் ஒன்றுகூடும் நேரமாகும். இது போன்ற நினைவுச்சின்னங்கள், நமது சமூகத்தின் கதைகளும் அனுபவங்களும் ஒருபோதும் மறக்கப்படாமல், கண்ணியத்துடனும் உண்மையுடனும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுவதை உறுதி செய்கின்றன.




முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தனது உரையை ஆற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஆண்ட்ரூ சார்ல்டன் தனது உரையில், இது ஒரு முக்கியமான நாள் நினைவு சின்னம் அந்த மக்கள் அனுபவித்த வலிகள் வேதனைகள் மற்றும் தியாகங்களை சுமந்து நிற்கின்றன. அது எம்மை அந்த நிகழ்வுகளை மறக்கவிடாது வைத்திருக்கின்றது. அண்மையில் கல்யாணி ஒழுங்குபடுத்திய நினைவுச் கண்காட்சியை கன்பராவில் சென்று பார்த்திருந்தேன். அதில் காணப்பட்ட புகைப்படங்கள் அந்த மக்கள் சந்தித்த வேதனைகளை எடுத்துக்கூறியிருந்தன.



நான் அதனை சுற்றிப் பார்த்தபோது மிகவும் வேதனையடைந்தேன். இனப்படுகொலையின் சாட்சியங்களாக அந்த படங்கள் அங்கு இருந்தன. தமிழ் சமூகத்தின் பங்களிப்பு அவுஸ்திரேலியாவுக்கு மிகவும் பயனுள்ளது. அவர்கள் ஒரு எதிர்கால கனவுடன் இங்கு வந்தனர், தமது வலிகளை சுமந்தவாறு எமது நாட்டுக்கு பங்களித்துவருவது என்பது நாம் அதனை பெற்றதற்கு அதிஸ்டசாலிகளாக இருக்கிறோம் என தெரிவித்திருந்தார்



கான்பெராவில் உள்ள நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கண்காட்சி அவரை எவ்வளவு ஆழமாகப் பாதித்தது என்பதையும், இன்று பகிரப்பட்ட கதைகள், படங்கள் மற்றும் அனுபவங்கள் அவரைத் தனிப்பட்ட முறையில் எவ்வாறு நெகிழச் செய்தன என்பதையும் கேட்பது மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது. அவரது சிந்தனைகள், நமது சமூகம் அனுபவித்த துன்பங்கள் மீதான உண்மையான இரக்கத்தையும் புரிதலையும், அத்துடன் நமது மக்களைத் தொடர்ந்து வரையறுக்கும் வலிமையையும் மனவுறுதியையும் வெளிப்படுத்தின.

## ஆசிரியர் தலையங்கம் | 30 மே, 2026

# இனஅழிப்புச் சமுகமான சிங்களச் சமுகத்தலைமை ஈழத்தமிழர் இறைமையினை தன்னாட்சியை ஏற்குமா?

மே 18 சரணடைதலின் மறு தொகுப்பல்ல (18 May is not for repackaging surrender) என்னும் தலைப்பில் தமிழ்நெற் வெளியிட்ட ஆய்வு அறிக்கையில் மே 18 வெறுமனே நினைவுநாளல்ல. ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே எவ்வளவு தூரத்துக்கு முள்ளிவாய்க்கால் உடையதும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துடையவும் அரசியல் பொருள்தன்மைக்கும் (Political meaning) இன்னமும் உறுதியுடையவர்களாக உள்ளோம் என்பதை அல்லது இரண்டையுமே ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான இருப்பினை (Safer Accommodation) உறுதிப்படுத்த எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதை மீள்பரிசோதனை செய்கின்ற நாளாக அமைய வேண்டும் என்கிற அழைப்பை விடுத்தது. இதனை இலக்கு சமகாலத்துக்கான புதிய சிந்தனையொன்றுக்கான தலைவாயிலாகக் கருதுகிறது.

வெறுமனே வாய்ப்பாடுகளை (Formulas) வரைகின்ற ஒப்புவிக்கின்ற நாளாக அல்லாமல் மக்களுக்கு இடமளிக்கும் (accommodation) முயற்சியாக அமைய வேண்டும் எனத் தமிழ்நெற் விதந்துரைத்தது. அத்துடன் எந்த அரசுடைய சட்டத்தகுதி குறித்து 22.05. 1972 முதல் இன்று வரை தகராறு உள்ளதோ அந்த அரசுடனான உள்ளக உடன்பாடு வழியாக எவ்வாறு ஈழத் தமிழர்களின் தாயகத்தையும் இறைமையையும். சரணடைய வைக்க இயலாத ஈழத்தமிழர்களின் அரசியல் தகுதி நிலையை வற்புறுத்திக்கேட்டுப் பெற்று பிரச்சினையைச் சீர்மைப்படுத்த இயலும் என்கின்ற நியாயமான கேள்வியையும் தமிழ்நெற் எழுப்பியிருந்தது.

அதே வேளையில் சிறிலங்கா ஈழத்தமிழின அழிப்பு அரசாக உள்ளதென்பதை உலகில் அமைதிக்காகவும் மனித உரிமைக்காகவும் உழைக்கும் செயற்பாட்டாளர்கள் ஆய்வாளர்கள் பலர் சமகாலத்தில் சிறிதளவிலேனும் தெளிவுபடுத்தி வருகின்றனர். இந்நேரத்தில் இது போலவே பெரும்பாலான சிங்களச் சமுகத்தினரும் ஈழத்தமிழின அழிப்புச் சமுகமாக பரிணாமடைந்துள்ளனர் என்ற வரலாற்றுப் பரிணாமத்தை தமிழ்நெற் உலகிற்குத் தெளிவுபடுத்தி உள்ளது.

எந்தச் சிங்களத் தலைமையாலும், ஈழத்தமிழர்களின் காலனித்துவ காலத்துக்கு முன்பிருந்த யாழ்ப்பாண வன்னி அரசுக்களின் நிலப்பரப்பில் ஈழத்தமிழர்களுக்கு 22.05. 1972 இல் சோல்பரி அரசியலமைப்பினை சிறிலங்கா சிங்கள பௌத்த குடியரசுப்பிரகடனம் மீறியதால் பிரித்தானிய காலனித்துவத்திடம் 1796 முதல் 1972 வரை 176 ஆண்டுகள் இருந்த ஈழத்தமிழரின் இறைமை அரசற்ற தேசஇனமாக (Nation without State) 22.05.1972 இல் வரலாற்றுப்பரிணாமடைந்த ஈழத்தமிழர்களிடம் மீண்டு அவர்கள் தங்களின் அரசியல் எதிர்காலத்தைத் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியையும் வளரச்சிகளையும் தரவல்ல தேசநிர்மாணத்தை (Nation Building Process) தொடர்கிறது என்ற வரலாற்று உண்மையையும், அதன் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் இறைமையுள்ள தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதையும், வாய்ப்பேச்சளவில் கூட ஏற்க ஆயத்தமில்லை என்கின்ற உண்மையைத் தனது ஆய்வில் தமிழ்நெற் தெளிவாக்கியுள்ளது என்பதை இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது. ரஸ்யாவின் சமுகவியல் விஞ்ஞானி பிளக்நொவ்வின் "ஒரு சமுகம் தனது வர்க்கத்தின் வகை மாதிரியான தலைமைத்துவத்தை உருவாக்கும்" என்பது இவ்விடத்தில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய கருத்தாகவுள்ளது.

தமிழ்நெற் சிங்கள இனம் இன்று ஈழத்தமிழின அழிப்பு சமுகமாகவே (Genocidal society) விளங்குகின்றது எனக் குறிப்பிட்ட 11 நாட்களுக்கு இடையிலேயே, சர்வசன அதிகாரசபை கட்சியின் உபதலைவரான முனைவர் சன்ன ஜயசுமன உடைய அறிக்கை அதனை உறுதி செய்துள்ளது. "எமது நாட்டில் எங்கும் தமிழ் இனப்படுகொலை நடைபெறவில்லை. ஆனால் கடந்த மே 18ம் நாள் வடக்கு மாகாணத்தின் பல இடங்களில் தமிழ் இனப்படுகொலை இடம்பெற்றதாகக் கூறி நினைவுநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதற்கு அநுரகுமார திசநாயக்கா தலைமையிலான அரசாங்கம் இடமளித்தமை கவலையளிக்கிறது. இது தொடர்பில் திருகோணமலை மாவட்ட பாராளமன்ற உறுப்பினர் ரொஷனல் அக்மீமன பாராளுமன்றத்தில் பத்திரிகைச் செய்திகளை மேற்கோள் காட்டி இத்தகைய நிகழ்வுகள் நடைபெற்றமையை உறுதிப்படுத்தினார். இவை நாட்டுக்கு அனைத்துலக மட்டத்தில் அபகீர்த்தியை உருவாக்குவதுடன் எதிர்காலத்தில் பல்வேறு பாதிப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலையையும் உருவாக்கும். படங்கள் சின்னங்கள் நிறங்கள் உடன் பிரிவினைவாதிகளை பயங்கரவாதிகளை நினைவு கூறும் இந்நிகழ்வுகள் குறித்து புலனாய்வு துறை அறியுமா? இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையென்ன? அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் யாருடைய அழுத்தத்தின் பெயரில் இந்த மௌனம் என நாங்கள் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்புகிறோம்.

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், பிரிகேடியர் பால்ராஜ் என்பவருக்குப் பாராளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தினார். அவரை நீங்களும் பிரிகேடியராக ஏற்றுக்கொள்கிறீர்களா? இவற்றுக்கு ஜனாதிபதி விளக்கம் அளிக்க வேண்டும்." என்பது அவ்வறிக்கையின் சாரமாகவுள்ளது. இவ்வாறு ஈழத்தமிழர்கள் தமது மண்ணினது பாதுகாப்புக்காவும் மக்களினது உயிரையும் உடமைகளையும் வாழ்வையும் பாதுகாப்பதற்காகவும் வீரச்சாவு அடைந்தவர்களுக்கு நன்றியுணர்வுடன் நினைவு கூறும் அடிப்படை மனிதச் சுதந்திரத்துக்கு எதிராக அறிக்கை வெளியிட்டுள்ள முனைவர் சன்ன ஜயசுமன, பிரிகேடியர் பால்ராஜ் அவர்களை மிகக்கேவலமான முறையில் சிங்கள சமுகம் விளங்கிக் கொள்ளும் வகையில் தனது அறிக்கையில் சித்தரித்து உள்ளமை சிங்கள சமுகத்தைத் தொடர்ந்தும் ஈழத்தமிழின அழிப்புச் சமுகமாகவே தக்க வைப்பதற்கான உத்தியாகவும் உள்ளது. . இந்த அறிக்கையொன்றே தமிழ்நெற், சிங்கள சமுகம் ஈழத்தமிழின அழிப்பு சமுகமாக பரிணாமம் அடைந்துள்ளது எனக் கூறியமைக்குச் சிறந்த இவ்வார உதாரணமாகிறது என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது. இதனை பிக்குகள் குற்றம் செய்கையில் அவர்களை சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்னும் சனநாயக ஆட்சிக்கான அடிப்படை நிபந்தனையில் இருந்து விடுவித்து 1931ம் ஆண்டின் பௌத்த அறக்கட்டளைச் சட்டத்தைத் திருத்தி "தர்மநீதி" என்ற பௌத்த ஆகமசட்ட நீதிமன்றத்தை அமைத்து பௌத்த மகாசங்கங்களே அவர்களுக்கான நீதியையும் வழங்கும் முறையை இடதுசாரித்துவம் தமது கொள்கையாக வளர்ந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமே முன்வருவது தமிழ்நெற்றின் கருத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது.

அதே நேரத்தில் அரகலிய போராட்டத்தின் முக்கியமானவராக விளங்கிய அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் அவர்கள் "1956 முதலே திட்டமிட்ட அடிப்படையில் சிங்கள அரசாங்கங்களால் தமிழ் மக்கள் இனரீதியாக அழிக்கப்பட்டு வருகின்றனர். இது நான் உணர்ச்சி வசப்பட்டுக் கூறும் ஒன்றல்ல பல அனைத்துலக ஆவணங்களில் உறுதிப்படுத்தப்பட்டவொன்று. 2013 யேர்மனியில் நிகழ்ந்த மக்கள் தீர்ப்பாயத்தில் அனைத்துலக கல்வியியலாளர்கள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்களால் அறிக்கை மூலம் இனஅழிப்பாகத் தெளிவாக்கப்பட்டவொன்று. 10.02.2015 இல் வடமாகாணசபையே 1948 முதல் இனஅழிப்பு நடைபெற்று வருவதாகத் தீர்மானம் நிறைவேற்றியது. 16.05.2022 இல் வடக்கு மற்றும் கிழக்கின் ஆயர்கள் நால்வரால் தமிழ் மக்கள் இன்றும் இனப்படுகொலைக்கு ஆளாகி வருகிறார்கள் என உறுதிப்படுத்தப்பட்டது" என இணைய ஊடகச் செவ்வியை 29.05. 2026 இல் வழங்கியுள்ளார். இவ்வாறு இனநல்லிணக்கத்துக்காக உழைக்கும் சிங்கள சகோதர்களும் உள்ளனர் ஆயினும் இத்தகையவர்களை ஊக்குவிக்க வேண்டிய தேசிய மக்கள் சக்தி எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதே கவலை அளிக்கும் விடயமாகவுள்ளது என்பதையும் இலக்கு எடுத்துரைக்கவிரும்புகிறது. இதனாலேயே இன்றைய அரசத்தலைவர் அநுரகுமரா திசநாயக்காவின் "யுத்தமற்ற இலங்கை" என்பது நடைமுறைச்சாத்தியமற்றவொன்றாக உள்ளதென இலக்கு கருதுகிறது. இந்நிலையில் அரசியல் எதார்த்தம் இவ்வாறாக இருக்கையில் கூட்டாட்சி என்கின்ற ஒரு நாட்டில் உள்ள அரசாங்கத்தின் ஆட்சியதிகாரத்தை அந்த அரசாங்கத்தின் இறைமையையே தலைமையாகக் கொண்ட நிலையில் பகிர்கின்ற முறைமை ஈழத்தமிழர்களுக்கு சிங்கள சமுகத்தால் வழங்கப்படுமா? வழங்கப்பட்டாலும் அத்தகைய ஆட்சியில் இனஅழிப்பு எவ்வாறு பாதுகாக்கப்படும் என்கின்ற இயல்பான கேள்விகளை தமிழ்நெற் எழுப்பியிருந்தது.

இதனை உறுதிப்படுத்தும் வரலாற்றுச் சான்றாக 1928 இல் டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு பொறுப்பாட்சியை வழங்க ஒற்றையாட்சி முறைமையை விதந்துரைத்த பொழுதே அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்ரர் முறைப் பாராளுமன்ற ஆட்சி முறைமை என்பது பிரித்தானியாவின் நீண்ட கால அரசியல் வரலாற்றின் பின்னர் உருவான அரசியல் பண்பாட்டின் வழியில் அமைந்தது. அத்தகைய நிலை இலங்கைக்கு இல்லை என்பதைத் தெளிவாக விளக்கி அதனை நிராகரித்தமை அமைகிறது. காலனித்துவ செயலாளருக்கு 13.06. 1945 இல் ஜி.ஜி. பொன்னம்பலம் அனுப்பிய 54/986/ 6/2 no 55 இலக்கத் தந்தியில் டி எஸ் சேனநாயக்கா சிங்களவர்களுக்கு மட்டுமே தலைவர் அவர் ஈழத்தமிழர் உட்பட்ட மற்றைய ஐந்து சமுகங்களுக்காகவும் எதனையும் கதைக்க இயலாது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்திருந்தார்.

அவ்வாறே 03.11. 1945 இல் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் காலனித்துவச் செயலாளர் ஹோல் அவர்களுக்கு அனுப்பிய Co 54/987/1 no 96 இலக்கப் 16 பக்க கடிதத்தில் சோல்பரி ஆணைக்கழுவின் விதந்துரைகளையும் முற்றாக நிராகரித்து " வகுப்புவாத வாய்ப்புற்று" (Canker of Communalism" ஆரம்பமாகிறது எனவும் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் அதன் முடிபாக பிரித்தானிய பாராளுமன்ற முறைமையிலான அரசியலமைப்பு முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியதொன்று எனவும் அடித்துரைத்திருந்தார். அக்காலத்துத் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் நல்லையா அவர்களும் பிரித்தானிய காலனித்துவ பேராட்சியிலிருந்து விடுபட தமிழர்கள் ரஸ்யாவின் துணை கொண்டு போராடுவோம் என அன்றைய ஆட்சியாளருக்கு எச்சரிப்பும் விடுத்தது வரலாறு. இவை தமிழ்நெற்டின் கூட்டாட்சி குறித்த கருத்துக்களுக்கு வலுச்சேர்க்கும் வரலாற்றுச் சான்றுகளாகவுள்ளன. மேலும் இணைப்பாட்சியே ( Con federal-ism) இருதேசங்கள் என்ற நிலையில் ஈழத்தமிழ்த்தேச இனமும் சிங்களத் தேச இனமும் கூட்டிணைப்பான ஆட்சியை வெளியக தன்னாட்சி உரிமையினை இழக்காத நிலையில் மேற்கொள்ளவதே ஆகக்குறைந்த தீர்வாக அமையக் கூடும் என்கின்ற விளக்கத்தையும் தமிழ்நெற் அளித்துள்ளது. ஆயினும் எந்தத் தீர்வும் ஈழத்தமிழர்களின் இறைமையையும் தன்னாட்சியையும் வெளியக தன்னாட்சி உரிமையினையும் அனுமதித்த நிலையிலேயே அது ஈழத்தமிழர்களுக்கான பாதுகாப்பான அமைதியான வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்புடையது என்ற தமிழ்நெற்றின் கருத்தை இலக்கும் இக்கால கட்டத்தில் வழிமொழிவது காலத்தின் தேவையாக உள்ளது.

**ஆசிரியர்**




**விதுரன்**

முப்பது ஆண்டுகால தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதி அத்தியாயம் முள்ளிவாய்க்காலிலும் நந்திக்கடலிலும் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களோடும், விடுதலைப் போராளிகளின் உதிரத்தோடும் முடிக்கப்பட்டு பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்டன.

எனினும், அந்தப் போரின் இறுதி நொடிகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் இறுதிப் பயணம் குறித்த சர்ச்சைகளும், வாக்குமூலங்களும் தென்னிலங்கை அரசியல் பரப்பில் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

போர்க்கால இராணுவத் தளபதியும் பீல்ட் மார்ஷலுமான சரத் பொன்சேகா, 'பிரபாகரனின் உடலுக்கு என்ன நடந்தது என்பது குறித்த இறுதி அறிவுறுத்தல்களைத் தான் வழங்கிய போதிலும், அதனை ஒருபோதும் வெளியில் கூறப்போவதில்லை' என்று வெளியிட்டுள்ள கருத்துக்கள் மீண்டும் ஒருமுறை பழைய காயங்களைக் கிளறியுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு, நினைவிடங்கள் அமைக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் போன்ற காரணங்களை முன்வைத்து பொன்சேகா இந்த இரகசியத்தைக் காப்பதாகக் கூறினாலும், இதன் பின்னாலுள்ள பேரினவாத அரசியல் சிந்தனையையும், வரலாற்று நாயகனின் தியாகத்தை இருட்டடிப்பு செய்ய முனையும் இராஜதந்திரத் தோல்வியையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சரத் பொன்சேகாவின் நேர்காணலில் மிக முக்கியமாக வெளிப்படும் அம்சம், 'தலைவர் பிரபாகரனின் உடல் அழிக்கப்பட்ட இடத்தை வெளியிட்டால், பிற்காலத்தில் அங்கு நினைவிடங்கள் அமைக்கப்பட்டு, அது நாட்டின் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் அச்சுறுத்தலாக மாறிவிடும்' என்ற அவரது தார்மீக அச்சமாகும்.

பேரரசைத் தனது இராணுவ உத்திகளாலும், உலகமே வியந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டினாலும் மூன்று தசாப்தங்களாக நடுங்க வைத்த தலைவனின் பூதவுடல், மறைந்த பின்னரும்கூட தென்னிலங்கை இராணுவ மேலாதிக்க சிந்தனையை எந்தளவுக்கு அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று எதுவுமில்லை.

சரித்திரத்தில், மாபெரும் விடுதலைப் போராட்ட வீரர்களின் உடல்களை எதிரிகள் இரகசியமாக அழித்த சம்பவங்கள் பல உண்டு. சேகுவேரா முதல் உலகெங்கும் உள்ள பல புரட்சியாளர்கள் வரை, உடல்களை மறைப்பதன் மூலம் அவர்களின் சித்தாந்தங்களை அழித்துவிடலாம் என்று ஆட்சியாளர்கள் கணக்குப் போட்டார்கள்.

பொன்சேகா நிலைநாட்ட முற்படுவதும் அதையொத்த அடக்குமுறை உத்தியைத்தான். ஆனால், அவர்கள் மறந்துபோன யதார்த்தம் என்னவெனில், பிரபாகரன் என்பவர் வெறும் சதைப்பற்றுகளான மனித உடல் அல்லர். அவர் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கூட்டு மனச்சாட்சியின் வடிவம்.

அநீதிக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தின் குறியீடு. நந்திக்கடலின் எந்த இரகசியப் புதருக்குள் அவரது உடலுக்கு என்ன செய்தோம் என்பதை பொன்சேகா மறைத்தாலும், முள்ளிவாய்க்கால் மண்ணின் ஒவ்வொரு துகளிலும், தமிழர்களின் நினைவலைகளிலும் அவரது தியாகத்தின் சாட்சியம் அழியாமல் பதிந்தே கிடக்கிறது.

பொன்சேகாவின் நேர்காணலில் மற்றொரு அதிர்ச்சிகரமான, ஆனால் உண்மையை வெளிப்படுத்தும் ஒப்புதல் வாக்குமூலம் உள்ளது. 'பிரபாகரன் உயிருடன் பிடிபட்டால் அவரை அரசியல் ரீதியாகப் பயன்படுத்தி வட-கிழக்கு முதலமைச்சராக்கக் கூடும் என்பதால், அவரை உயிருடன் பிடிப்பதல்ல, மாறாகப் போர்க்களத்தில் முற்றாக ஒழிப்பதே தனது இராணுவத் திட்டமாக இருந்தது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், இறுதிப் போரில் சர்வதேச யுத்த விதிகளோ அல்லது சரணடைதல் போன்ற மனிதாபிமான நடைமுறைகளோ பின்பற்றப்படவில்லை என்பதும், திட்டமிட்ட இனப்படுகொலை உத்தியே கையாளப்பட்டது என்பதும் அம்பலமாகியுள்ளது.

ஆனால், இந்த உத்தியைக் கடந்து உற்றுநோக்க வேண்டியது தலைவர் பிரபாகரனினதும், அவரது தலைமையிலான விடுதலைப் புலிகளினதும் உன்னதமான தியாகப் பண்பாகும்.

உலகின் எத்தனையோ போராட்டத் தலைவர்கள் போரின் இறுதி கட்டத்தில் அண்டை நாடுகளுக்குத் தப்பியோடி அரசியல் தஞ்சம் புகுந்த வரலாறுகள் உண்டு. தங்களின் உயிரைக் காத்துக் கொள்வதற்காகக் கொள்கைகளை அடகு வைத்த தலைவர்களும் உண்டு.

அவர்களுக்கு மத்தியில், இறுதி நொடி வரை தனது மக்களோடும், எஞ்சிய போராளிகளோடும் நந்திக்கடல் களப்பிலேயே நின்று சமரசம் ஏதுமின்றிப் போரிட்டு மடிந்த தலைவர் பிரபாகரனின் தியாகம் உலக வரலாற்றில் என்றுமே உன்னதமானது.



பிரபாகரன் நினைத்திருந்தால், சர்வதேசத் தொடர்புகளைப் பயன்படுத்திப் பாதுகாப்பாக நாட்டை விட்டு வெளியேறியிருக்க முடியும். ஆனால், 'என் மக்களுடன் என் மண்ணில் மடிவேன்' என்ற அவரது அசைக்க முடியாத கொள்கை உறுதி தான் அவரை சாதாரண அரசியல்வாதியாக அல்லாமல், ஈகத்தின் உச்சமாக வரலாற்றுப் பக்கங்களில் செதுக்கியுள்ளது.

பொன்சேகா விவரிக்கும் அந்தச் சிதைந்த உடலமைப் பும், கனரக ஆயுதங்களின் கொடூரத் தாக்குதல்களும், விடுதலைப் புலிகளின் தலைவர் எத்தகையதொரு உக்கிரமான இறுதிப்போரை எதிர்கொண்டார் என்பதையும், மரணத்தைக் கண்டு அவர் அஞ்சாமல் களத்திலேயே தியாகியானார் என்பதையும் தான் உலகிற்கு உரத்துச் சொல்கிறது.

போர்க்களத்தில் பிரபாகரனின் உடல் கண்டெடுக்கப்பட்ட போது, அவர் அணிந்திருந்த விடுதலைப் புலிகளின் இராணுவச் சீருடையை உடனடியாகக் கழற்றுமாறு தான் கட்டளையிட்டதாகப் பொன்சேகா பெருமையுடன் கூறியுள்ளார்.

பன்னிரண்டாயிரம் போராளிகள் சரணடைந்த போது சீருடை அணிய அனுமதிக்கவில்லை என்ற போர்க்கால விதியை இதற்குக் காரணமாக அவர் கூறுகிறார். எனினும், போராளி தனது இறுதி மூச்சு வரை அணிந்திருந்த சீருடையை, அவர் இறந்த பின்னரும் கழற்றச் சொன்னதன் பின்னணியில் இருப்பது வெறும் இராணுவ விதி அல்ல.

அதுவொரு மாபெரும் விடுதலை இயக்கத்தின் அடையாளத்தை, அதன் அங்கீகாரத்தை வரலாற்றிலிருந்து துடைத்தெறிய முயற்சித்த பேரினவாத வன்மத்தின் வெளிப்பாடாகும் என்பதை புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது ஏதோவொரு சாதாரண இயக்கம் அல்ல. அது தமக்கென ஒரு தரைப்படை, கடற்படை (கடற்புலிகள்), வான்படை (வான்புலிகள்), காவல் துறை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்புகளைக் கொண்டு, நிழல் அரசாங்கத்தையே நடத்திய மரபுவழி இராணுவக் கட்டமைப்பாகும்.

அவர்களின் சீருடை என்பது தமிழர்களின் சுயமரியாதையினதும், இறையாண்மையினதும் அடையாளமாக விளங்கியது. அந்தச் சீருடையை அகற்றுவதன் மூலம், அவ்வியக்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை சிறுமைப்படுத்திவிடலாம் எனப் பொன்சேகா போன்றவர்கள் நினைத்திருக்கலாம்.

ஆனால், சீருடைகளைக் கழற்றியதாலோ, உடல்களை இரகசியமாக அழித்ததாலோ முப்பது ஆண்டுகாலம் தமிழினம் சிந்திய குருதியும், சுமந்த தியாகங்களும் மறைந்து போகாது. மாறாக, எதிரியின் இத்தகைய சிறுமைத்தனமான நடவடிக்கைகள், அந்தப் போராட்டத்தின் தூய்மையையும் அதன் தலைவனின் தியாகத்தையும் மேலும் பிரகாசமாக்கி அடுத்த தலைமுறைக்கும் இயல்பாகவே கடத்துகின்றது.

சரத் பொன்சேகாவும் தென்னிலங்கை அரசும் இறுதிப் போரின் வெற்றியைத் தங்களின் உன்னத இராணுவ சாதனையாகக் கொண்டாடினாலும், அரசியல் ரீதியாக அவர்கள் இன்னும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டச் சிந்தனையை வெல்ல முடியாமல் தோற்றுத்தான் இருக்கிறார்கள்.

தலைவர் பிரபாகரனின் தூரநோக்குச் சிந்தனை என்பது வெறும் ஆயுதங்களின் பலத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி என்ற தத்துவார்த்த அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்டதாகும்.

அவர் தனது வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய யதார்த்தம் என்னவெனில், தென்னிலங்கையின் எந்தவொரு அரசியல் கட்டமைப்பும் தமிழ் மக்களுக்கு சமவுரிமையையோ அல்லது நீதியான அரசியல் தீர்வையோ தாராளமாக வழங்கிவிடப் போவதில்லை என்பதாகும்.

முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்து 17 ஆண்டுகள் கடந்த பின்னரும், தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவதும், தமிழ் மக்கள் இன்னும் வீதிகளில் இறங்கிப் போராடிக் கொண்டிருப்பதும் பிரபாகரனின் அந்தத் தூரநோக்கு அரசியல் கணிப்பு எவ்வளவு துல்லியமானது என்பதை நிரூபிக்கின்றது.

பிரபாகரன் விதைத்த உரிமைப்போராட்ட சிந்தனை என்பது ஒருபோதும் மரணிப்பதில்லை. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அந்த ஆயுதங்களை ஏந்த வைத்த அடக்குமுறைகளும், அநீதிகளும் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன.

'நாங்கள் ஒரு நியாயமான இலட்சியத்திற்காகப் போராடுகிறோம்; அந்த இலட்சியம் மக்களின் இதயங்களில் வாழ்கிறது' என்ற அவரது சிந்தனைக்கேற்ப, தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான தாகம் இருக்கும் வரை பிரபாகரனின் சிந்தனைகளும் அவரது ஈகமும் அழியாது.

பொன்சேகாக்கள் இரகசியங்களை நந்திக்கடலோடு புதைக்கப் பார்த்தாலும், தமிழினம் உலகப் பரப்பெங்கும் பரந்து வாழும் வரை, தங்களின் சுயமரியாதைக்காகவும், விடுதலைக்காகவும் சமரசமின்றி நின்ற அந்த உன்னதத் தலைவனின் தூரநோக்குச் சிந்தனையும், அவர் வழிநடத்திய உரிமைப் போராட்ட வரலாறும் உலக வரலாற்றின் நீங்காப் பக்கங்களாகத் தொடர்ந்து சுடர்விட்டுக் கொண்டே தான் இருக்கும்.

• • •




*** பாலியல் குற்றச்சாட்டுக்களுக்கு வத்திக்கானின் புதிய நடைமுறை...**
*** பிரித்தானிய அங்கலிக்கன் திருஅவையும் அதே ஏற்பாடு...**
*** நவீன உலகப் பொதுநீதியை கற்க வேண்டிய இலங்கை...**

பத்திரிகையாளர்- **அ.நிக்ஸன்**

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம், 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற கொள்கையைத் தீவிரமாக வலியுறுத்தி வரும் சூழலில், அட்டமாஸ் தானதிபதி பல்லேகம ஹேமரத்தன தேரர் மீதான பாலியல் குற்றச்சாட்டை விசாரிக்க, இலங்கைப் பொதுச் சட்டத்திற்கு மாறாக பௌத்த சங்க ஒழுக்க விதிமுறையை முன்னிறுத்துவது எங்கனம் நியாயமாகும்?



## நவீன உலகப் பொதுநீதி என்ற ஒன்று உண்டல்லவா?

கத்தோலிக்க திருஅவை மற்றும் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட அங்கலிக்கன் திருஅவை (Church of England) ஆகியவற்றின் மதத் தலைவர்கள் தவறு செய்தால், அவர்களை விசாரிக்கத் தனித்தனியான திருச்சபைச் சட்ட முறைகள் (Ecclesiastical / Canon Law) நடைமுறையில் உள்ளன.

ஆனாலும், நிதி மோசடி, பாலியல் குற்றங்கள் போன்ற பொதுவான குற்றவியல் செயல்களுக்கு, சாதாரண மக்களை விசாரணைக்கு உட்படுத்தும் பொதுவான நீதிமன்றங்கள் மற்றும் சட்டங்களின் ஊடாகவே விசாரணைகள் நடத்தப்படும்.

இந்த நவீன உலகப் பொதுமுறையைத் தற்போது பிரித்தானியாவும் இத்தாலியும் 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தியுள்ளன.

இந்த உலகப் பொதுமுறை குறித்து, கத்தோலிக்க திருஅவையின் 'வத்திக்கான் நியூஸ்' (Vatican News) மற்றும் 'தி நியூயார்க் டைம்ஸ்' (The New York Times) ஆகிய முதன்மைச் செய்தித் தளங்கள் இந்த ஆண்டு செய்திகளை வெளியிட்டிருந்தன.

ஒரு மதத் தலைவர் பாலியல் துஸ்பிரயோகம், நிதி மோசடி உள்ளிட்ட குற்றவியல் செயல்களில் ஈடுபட்டால், மத அடிப்படையிலான நீதிப் பொறிமுறையின் மூலம் அதற்கு விசாரணை நடத்த முடியாது என்ற வாதங்களை இச்செய்தித் தளங்கள் முன்வைத்துள்ளன.

முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் 2021 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய சட்டச் சீர்திருத்தங்களையும் அவை சுட்டிக்காட்டி, சிறந்த ஏற்பாடு என்றும் இச் செய்தித் தளங்கள் வரவேற்றிருந்தன.


இத்தாலி நாட்டின் வத்திக்கான் நகரை மையப்படுத்திய கத்தோலிக்க திருஅவை, மற்றும் பிரித்தானியாவின் அங்கலிக்கன் திருஅவை ஆகியவற்றுக்குத் தனியான சபை நீதிமன்றங்கள் உள்ளன.



பேராயர்கள் (Archbishops), ஆயர்கள் அல்லது குருக்கள் மதக் கோட்பாடுகளை மீறினாலோ, சபை ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மீறினாலோ அல்லது திருஅவைச் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தினாலோ இந்தச் சபை நீதிமன்றங்கள் மூலம் விசாரணை நடக்கும்.

ஓர் அங்கலிக்கன் மதத் தலைவர், பிரித்தானியப் பொதுச் சட்டத்திற்கு மாறான கொலை, கொள்ளை, நிதி மோசடி, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற குற்றவியல் (Criminal) செயல்களில் ஈடுபட்டால், அவருக்குச் சபைச் சட்டம் பாதுகாப்பு வழங்காது.

பிரித்தானியாவின் சாதாரண சட்டத்தின்படி, அந்நாட்டின் பொலிஸ் துறையும் நீதிமன்றங்களும் நேரடியாக அவர்களைக் கைது செய்து, பிரித்தானிய பொதுச் சட்டத்தின் கீழ் விசாரித்துத் தண்டனை வழங்கும்; சிறையிலும் அடைக்கும்.



அதேபோன்று, வத்திக்கானில் திருஅவை நிர்வாகம் மற்றும் ஆன்மீகக் கடமைகளை ஒழுங்குபடுத்த 'கத்தோலிக்க திருஅவைச் சட்டம்' (Canon Law) என்ற மரபு வழிச் சட்டம், நடைமுறையில் உள்ளது.

கடந்த காலங்களில், கர்தினால்கள் மற்றும் ஆயர்கள் (Bishops) ஏதேனும் தவறு செய்தால், அவர்களைச் சாதாரண நீதிமன்றங்கள் விசாரிக்க முடியாது என்ற சிறப்புச் சலுகை இருந்தது.

குற்றம் இழைத்த கர்தினால்களை மற்றொரு கர்தினால் தலைமையிலான உயர்மட்டக் குழுவே விசாரிக்க முடியும் என்ற விதி இருந்தது.

ஆனால், திருத்தந்தை பிரான்சிஸ் 2021 இல் நடைமுறைப்படுத்திய புதிய சட்ட சீர்திருத்தத்தின்படி இந்தச் சலுகை ரத்து செய்யப்பட்டுள்ளது.

தற்போது, கர்தினால்கள் நிதி மோசடி போன்ற பொதுவான குற்றங்களைச் செய்தால், வத்திக்கானின் சாதாரண நீதிமன்றத்தில் உள்ள சாதாரண பொதுமக்களான (Lay Judges) நீதிபதிகளே இவர்களை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

உதாரணமாக, 2023 இல் கர்தினால் ஆன்ஜெலோ பெச்சு (Cardinal Angelo Becciu) என்பவருக்கு நிதி மோசடி வழக்கில் வத்திக்கான் நீதிமன்றம் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்திருந்தது.



வத்திக்கான் என்பது இத்தாலி நாட்டுக்குள் இருந்தாலும், அது தனி இறையாண்மை கொண்ட ஒரு நாடாகும். ஆகவே, வத்திக்கானுக்குள் நடக்கும் குற்றங்களை வத்திக்கானின் சொந்த நீதிமன்றமே விசாரிக்கும்.

இருப்பினும், குற்றவாளிகள் இத்தாலி எல்லைக்குள் தப்பியோடினாலோ, அல்லது இத்தாலிய பொலிஸ் துறையுடன் இணைந்து கூட்டு விசாரணை நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டாலோ மாத்திரமே, அங்கு இத்தாலிய பொதுச் சட்டம் பயன்படுத்தப்படும்.

கத்தோலிக்க திருஅவைச் சட்டங்களின்படி, பூமியில் திருத்தந்தைக்கு மேல் எந்தவொரு மனித அதிகாரமும் இல்லை. (The First See is judged by no one) அதனால், பதவியில் இருக்கும் திருத்தந்தையை எந்த நீதிமன்றமும் விசாரிக்க முடியாது. அவர் தனிப்பட்ட முறையில் பதவி விலகினால் மாத்திரமே அடுத்தகட்ட நடவடிக்கைகள் சாத்தியமாகும்.

ஆகவே, வத்திக்கானில் கர்தினால்களாக இருந்தாலும், பிரித்தானியாவில் பேராயர்களாக இருந்தாலும், சிவில் மற்றும் குற்றவியல் தவறுகளுக்கு அந்நாடுகளின் பொதுச்

தொடர்ச்சி: பக்கம் 14

# மாகாண சபைத்தேர்தல் நடக்கும்; ஆனால் நடக்காது.!!

பா.அரியநேத்திரன்

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இந்த ஆண்டு 2026 ல் இல்லை எனவும் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் நோக்கில் அதற்கான நிதியை நாங்கள் ஒதுக்கீடு செய்திருந்தோம். ஆனால் அவ்வாறு திட்டமிட்டிருந்த வேளையில் நாட்டில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான நெருக்கடி சூழலும் உருவானது.



இதன் காரணமாக, அனர்த்த நெருக்கடி நிலையை சமாளிப்பதற்காக மாத்திரம் 500 பில்லியன் ரூபாய்களை ஒதுக்க வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது.

அந்த நிதிதான் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியாகும். இதன் காரணமாகவே இவ்வருடத்தில் எங்களால் தேர்தலை நடத்த முடியாமல் போனது. அத்துடன் தற்போது சில புதிய சட்டப் பிரச்சினைகளும் எழுந்துள்ளன.

ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக இருந்த சட்டரீதியான வழிமுறைகளில் குளறுபடிகள் ஏற்பட்டதே இதற்குப் பிரதான காரணமாகும் என ரில்வின் சில்வா கடந்த (23/05/2026) யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பு அலுவலகத்தைத் திறந்து வைத்ததன் பின்னர் கூறியிருந்தார்.



அவர் இவ்வாறான கருத்தை கூறி சரியாக மூன்று தினங்களால் (26/05/2026) அன்று மறுதலித்த அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஷ்ச மாகாணசபை தேர்தல் இந்த ஆண்டு நடைபெறும் சட்ட சிக்கலால் தான் தேர்தலுக்கு தேவையான பணம் அரசிடம் உள்ளது எனவும் ரில்வின் சில்வாவின் கூற்றை பொய்யாக்கி பேசினார்.

இதில் யார் கூறியது சரி? மாகாணசபைத் தேர்தல் இந்த வருடம் நடக்கும் ஆனால் நடக்காது என்ற தென்னிந்திய திரைப்பட நகைச்சுவை நடிகர் வடிவேலு பாணியில் தேசிய மக்கள் சக்தி அரசின் நிலைப்பாடு உள்ளதை இவர்களுடைய இரட்டை நிலைப்பாடும் முரண்பட்ட கருத்துக்களும் கோடிட்டு காட்டுகிறது.

மாகாணசபை தேர்தல் தொடர்பாக இறுதி முடிவு தெரியாத நிலை தொடர்கிறது. இதேவேளை கடந்த (26/05/2026) ல் கொழும்பில் தேர்தல் முறைமை குறித்து ஆராய கூடிய சிவில் அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் கலந்து கொண்ட கூட்டத்தில் 42.எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து கையொப்பம் இட்டு மாகாணசபை தேர்தலை பழைய முறையில் அதாவது விகிதாசார முறையில் இந்த ஆண்டு நடத்தவேண்டும் என ஒரு பிரகடனத்தை தயாரித்து அதில் கையொப்பம் இட்டு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கும் வழங்கியுள்ளனர். இதில் தேசிய மக்கள் சக்தி ஆளும் தரப்பு மட்டுமே கையொப்பம் இடவில்லை.

இந்த 42, எதிர்கட்சிகளில் 15 கட்சிகள் தற்போதைய நாடாளுமன்றத்தில் ஓரிரு எதிர்கட்சி ஆசனங்களுடன் அங்கம் வகிக்கின்றனர். 27 கட்சிகள் நாடாளுமன்றத்தில் எந்த ஆசனங்களையும் பெறாத கட்சிகளாகும்.

தேசியமக்கள் சக்தியில் ஜனாதிபதி அநுரகுமாரதிசநாயக்க தெரிவாகி 159, ஆசனங்களுடன் கடந்த 2024, நவம்பரில் ஆட்சியமைத்தாலும் ஜனாதிபதிக்கும், அவர்களுடைய ஆட்சியில் உள்ள பிரதமர், மற்றும் அமைச்சர்களுக்கு இல்லாத அதிகாரமும், அந்த கட்சிகளை தீர்மானிக்கும் சக்தியும் பலமும் மக்கள் விடுதலை முன்னணி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவிற்கே உள்ளது என்பது எழுதப்படாத விதியும் நடைமுறையும் ஆகும். அதனால் ஜனாதிபதி கூறும் விடயங்களை விட ரில்வின் சில்வா கூறும் விடயங்கள் நடைமுறைக்கு சாத்தியமானதாகவே நோக்கவேண்டியுள்ளது.

ரில்வின் சில்வா யாழ்ப்பாணத்தில் இன்னுமொரு உண்மையை கூறினார்.மாகாணசபை தேர்தலை நடத்துமாறு இந்தியத் தரப்பிலிருந்து எங்களுக்கு எந்தவிதமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை. இந்திய அரசிற்கும் எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கும் இடையிலும் மிகச் சிறந்த, நட்புறவானதொரு தொடர்பு நிலவுகிறது. எமக்கிடையே நல்லதொரு புரிதல் காணப்படுகிறது என்றார்.




அவருடைய கருத்தில் இருந்து அறியக்கூடியது இந்திய அரசானது மாகாணசபை தேர்தலை நடத்துமாறு தேசிய மக்கள் சக்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை, ஆனால் தமிழ்தேசிய கட்சிகளின் தலைவர்கள் இந்தியப் பிரதமர், இந்திய துணை ஜனாதிபதி, இந்திய தூதுவர்கள், இந்திய இராஜதந்திரிகளுடன் மாகாணசபை தேர்தல் உடனே நடத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என கூறி அவர்களுடன் வரிசையில் நின்று படம் எடுத்து கூறிய கருத்துகள் எவைகளையும் இந்திய அரசு கணக்கில் எடுக்கவில்லை. தமிழ்தேசிய கட்சிகள் கூறியதை இந்திய அரசு ஒரு பொருட்டாக எடுக்காமல் உதாசீனம் செய்துள்ளனர் என்பதையே ரில்வின் சில்வாவின் கருத்தில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி பி) மற்றும் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (என் பி பி) ஆகியன கொள்கை அளவில் மாகாண சபை முறைமைக்கு எதிரா னவை. இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட இந்த முறைமை, நாட்டில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தத் தவறிவிட்டதாக கருதும் அவர்கள், எதிர்காலத்தில் இதற்கு மாற்றான புதிய அதிகாரப் பகிர்வு முறையை உருவாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை 1987 தொடக்கம் கொண்டுள்ளனர் என்பதே உண்மை.



மாகாண சபை முறைமைக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்தில் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியது. தற்போதும் அதே நிலைப்பாட்டில் இருக்கின்றீர்களா? என ஊடகவியலாளர் ஒருவர் தற்போதைய அநுராவிடம் (அப்போது அவர் ஜனாதிபதி இல்லை) கடந்த 2023,ஜனவரி,31ல் கேட்ட போது அவர் கூறிய பதில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது நாட்டில் அமைதியற்ற தன்மை காணப்பட்டது. அக்காலக்கட்டத்தில் சிங்கள அரசியல்வாதிகளுக்கும், தமிழ் தலைமைகளின் இணக்கப்பாடான பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட வில்லை. இந்தியாவின் தேவைக்காகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் தற்போது நிலைமை மாற்றமடைந்து விட்டது. தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவே மாகாண சபை முறைமை தற்போது உள்ளது. ஆகவே மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எதிர்க்க போவதில்லை என கூறினார்.

2024 செப்டம்பர் 21 ல் ஜனாதிபதி தேர்தலில் தெரிவாகிய அநுரா 2024 நவம்பர் 14 பொதுத்தேர்தலில் 159 அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த பின்னர் 2025 பெப்ரவரியில் ஊடகங்களுக்கு கருத்து கூறிய மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, 13ஆவது திருத்தத்தின் கீழான மாகாண சபை முறைமையானது இலக்குகளை அடையவில்லை ஆனால், தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்கும் வரை அதனை ஒழிக்க மாட்டோம் என்ற தொனியிலும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அப்படியென்றால், தமிழர்களுக்கான நியாயமான தீர்வு என்ன? என்பதை அவரால் கூறமுடியவில்லை. தற்போது ஆளும் தரப்பை விட எதிர்கட்சிகளான சிங்கள, தமிழ், முஸ்லீம், கட்சிகளுக்கு மாகாணசபை தேர்தல் தேவையாக உள்ளது மாகாணசபை தேர்தலில் தமது பலத்தை காட்டுவது மட்டுமே.

வடகிழக்கில் உள்ள தமிழ்த்தேசிய கட்சிகளும் அதிகாரப்பரவலாக்கத்துக்காக மாகாணசபை தேர்தலை இப்போது கோரவில்லை மாறாக ஆட்சியில் ஆசனங்களை பெற்று தமது பலத்தை நிருபிக்கவும் முதலமைச்சர் கதிரைகளை அலங்கரிக்கவும் பதவி ஆசைக்காகவுமே உடனே மாகாணசபை தேர்தலை பழைய விகிதாசார முறையில் நடத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். அறிக்கை விடுகின்றனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எதிர்க்கட்சி தலைவர் பதவியின் (இரா.சம்மந்தன்) 2015 தொடக்கம் 2020 வரை செயல்பட்டது. இந்த காலப்பகுதியான 2017 செப்டம்பர் 22 ல் நிறைவேற்றப்பட்ட மாகாணசபை புதிய திருத்தச் சட்டம் இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் களை நடத்துவதற்கான முறையை மாற்றுவதற்காக நிறைவேற்றப் பட்டது.



இச்சட்டத்தின்படி 60% வீதம் உறுப்பினர்கள் தொகுதி வாரியாகவும் மீதமுள்ள 40% வீதம் உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களைப் போலவே மாகாண சபைகளிலும் பெண்களுக்கு 25% வீதம் இட ஒதுக்கீடு கட்டாயமாக்கப்பட்டது.

இந்த சட்டத்திற்கு அமைய மாகாண சபைத் தொகுதிகளை மீளமைக்க குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால் அது நடைமுறையில் தாமதம் ஏற்பட்டதாலும், சட்டச் சிக்கல்கள் எழுந்ததாலும் இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதில் தொடர்ச்சியாக நல்லாட்சி தொடக்கம் தற்போது வரை சிக்கல் தொடர்கிறது.

இதன் காரணமாக மாகாண சபைத் தேர்தல்கள் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டு, பல வருடங்களாக மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இன்றி இயங்காமல் உள்ளன. இந்த இழுபறிக்கு இலங்கையில் உள்ள சகல கட்சிகளும் நல்லாட்சி காலத்தில் விட்ட தவறாகும்.

2017 ல் நல்லாட்சிக்கு முட்டுக்கொடுத்த அனைத்து கட்சிகளும் மாகாணசபை திருத்த சட்டத்தை எதிர்க்கவில்லை. அப்போது நல்லாட்சி அரசை தூக்கி தலையில் வைத்து கொண்டாடும்போது மாகாணசபை சட்டமூலத்தை திருத்தத்தை தமிழரசுக்கட்சி உட்பட அனைத்து கட்சிகளும் ஏற்றனர். அன்று ஆதரவு வழங்கிய எல்லா கட்சிகளுக்கும் இப்போது தங்களுடைய பதவி ஆசைகளுக்காக மாகாணசபை தேர்தல் தேவைப்படுகிறது என்பதே உண்மை.


அதிகாரப்பரவலுக்காக இதில் எவருமே மாகாண சபை தேர்தலை கோரவில்லை. தமது கட்சிகளின் செல்வாக்கை நிருபிக்கவும், முதலமைச்சர் பதவிகளை பெறவும் மாகாணசபை தேர்தலை பயன்படுத்த பார்ப்பதே சகல எதிர் கட்சிகளின் கொள்கையாக உள்ளது.

• • •




மத்திய கிழக்கில் நீடித்து வரும் தீவிரமான போர்ச் சூழல் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் உலகப் பொருளாதாரத்தையே ஆட்டம் காண வைத்திருக்கும் பின்னணியில், ஏற்கனவே மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மெல்ல மீண்டு வர முயன்று கொண் டிருந்த இலங்கை, மீண்டுமொரு பாரிய இடருக்குள் தள்ளப் பட்டிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்ற பின் னர், உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒருபுறமிருக்க, சர்வதேச ரீதியாகத் தோன்றி வரும் வெளியக அதிர்ச்சிகள் (External Shocks) நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு பெரும் சவாலாக மாறியுள்ளன.



அண்மையில் பாராளுமன்ற நிதிக் குழுவின் முன்பாக முன்னிலையாகி இருந்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் எச்சரிக்கை அறிக்கை, இலங்கை மீண்டுமொரு அபாயகரமான சூழலை நோக்கி நகர்கிறதோ என்ற நியாயமான அச்சத்தை மக்கள் மத்தியிலும் பொருளாதார வல்லுநர்கள் மத்தியிலும் தோற்றுவித்துள்ளது.

தற்போதைய சூழல், கடந்த 2022 ஆம் ஆண்டு நாடு எதிர்கொண்ட வரலாறு காணாத பொருளாதார வீழ்ச்சியின் கோர நினைவுகளை மீண்டும் கிளறிவிட்டுள்ளதுடன், புதிய அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்தின் பொருளாதாரக் கையாளுகைத் திறனை உரைத்துப் பார்க்கும் களமாகவும் மாறியிருக்கிறது.



அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தரப்புக்கள் மற்றும் மத்திய வங்கியின் தரவுகளை உற்றுநோக்கும் போது, இலங்கை ரூபாவின் மதிப்பில் ஏற்பட்டு வரும் சடுதியான வீழ்ச்சி மிகவும் கவலையளிக்கும் ஒன்றாக உருவெடுத்துள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 2024 ஆம் ஆண்டு டிசம்பரில் பொறுப்பேற்ற போது 289 ரூபாவாகக் காணப்பட்ட அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு, அண்மையில் 354 ரூபா வரையில் வீழ்ச்சியடைந்தது.

வெறும் இரு ஆண்டுகளுக்குள் டொலரின் மதிப்பு 65 ரூபாவுக்கும் அதிகமாக உயர்வடைந்திருப்பது சாதாரண மான ஒரு சந்தை மாற்றமல்ல. கடந்த காலங்களில் சதக் கணக்கில் அல்லது மிக மெதுவாகக் குறைந்து வந்த ரூபாவின் பெறுமதி, தற்போது ஒரே நாளில் 10 முதல் 12 ரூபா வரை சரிவடையும் அளவுக்கு 'ரொக்கட் வேகத்தில்' வீழ்ச்சி கண்டுள்ளது. இது இப்போது கட்டுப்படுத்தப்பட்டதாக கூறப்பட்டாலும் நிச்சமயமற்ற நிலைமையே நீடிக்கிறது.

குறிப்பாக, 2028 ஆம் ஆண்டில் இலங்கை 3.259பில்லி யன் டொலர் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டுள்ள சூழலில், டொலரின் மதிப்பு இவ்வாறு கட்டுப்பாடின்றி அதிகரிப்பதும், அதற்கேற்ப அதன் கையிருப்பு கரைந்து வருவதும் ஆபத்தான எச்சரிக்கை மணி என்பதில் ஐயமில்லை.

மத்திய வங்கியின் விளக்கங்களின்படி, அமெரிக்க டொலரின் உலகளாவிய பலம் மற்றும் அண்மைய நாட்களில் நிலவிய சந்தை ஊகங்கள் (Market Speculations) காரணமாக உருவான செயற்கையான 'மிகைக் கேள்வி' (Excess Demand) இந்த சடுதியான வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

பதற்றமடைந்த இறக்குமதியாளர்கள் தமக்குத் தேவையான டொலர்களைக் கூடுதல் விலை கொடுத்து வாங்கியதால் சில்லறைச் சந்தையில் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டது. எனினும், மத்திய வங்கியின் தலையீடு மற்றும் ஓரிரவுக் கொள்கை வீதத்தினை 100 அடிப்படைப் புள்ளிகளால் உயர்த்தி 8.75 சதவீதமாக அதிகரித்தமை போன்ற இறுக்கமான நிதிக்கொள்கை நடவடிக்கைகள் மூலம் இந்தத் தளம்பல் நிலை தற்காலிகமாகச் சீரமைக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.



இருந்தபோதிலும், 700 பில்லியன் டொலர் என்ற பிரம்மாண்ட அந்நியச் செலாவணி கையிருப்பை வைத்து ள்ள இந்தியாவின் நாணயமே டொலரின் வலுவடைதல் காரணமாக மதிப்பிழந்து வரும் வேளையில், வெறும் 6.8 பில்லியன் டொலர் தேறிய வெளிநாட்டுக் கையிருப்பை மாத்திரம் கொண்டுள்ள இலங்கை, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கவுள்ள 900 மில்லியன் டொலர் நிதியை மட்டும் நம்பி எவ்வாறு ரூபாவின் ஸ்திரத்தன்மையை நீண்ட காலத்திற்குப் பேணப் போகிறது என்ற கேள்வி பொருளாதார ஆய்வாளர்களால் எழுப்பப்படுகிறது.

மறுபுறத்தில், நாட்டின் பிரதான அந்நியச் செலா வணி உறைவிடமாக விளங்கும் சுற்றுலாத்துறையின் வருமான வீழ்ச்சி அரசாங்கத்திற்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மிகக் குறைந்தபட்ச வருமானத்தை ஈட்டிய மாதமாக 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதிவாகியுள்ளது.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 257 மில்லியன் டொலராகக் காணப்பட்ட சுற்றுலா வருமானம், இவ்வாண்டு ஏப்ரலில் வெறும் 157 மில்லியன் டொலராகக் கடுமையாகச் சரிந்துள்ளது. ஒரே வருடத்தில் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் மட்டும் 100 மில்லியன் டொலர் வருவாய் இழப்பு ஏற் பட்டுள்ளது.

இதேபோக்கு அடுத்தடுத்த மாதங்களிலும் தொடரு மானால், ஆண்டுக்கு 1.2 பில்லியன் டொலர் வருமான

விதுரன்

இழப்பை நாடு சந்திக்க நேரிடும். அதிர்ஷ்டவசமாக, இக் காலப்பகுதியில் வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் (Worker Remittances) கடந்த ஆண்டின் 2.5 பில்லியன் டொலரிலிருந்து 3.1 பில்லியன் டொலராக அதிகரித்துக் காணப்படுவது ஓரளவுக்கு ஆறுதலளித்தாலும், சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியை இதனால் முழுமையாக ஈடுசெய்ய முடியாது.

இந்த வருமான இழப்பு மற்றும் டொலர் பற்றாக் குறையைச் சமாளிப்பதற்காக, வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் வரிக்கு மேல் வரி விதித்துள்ளதோடு, கடன்களுக்கான உச்ச வரம்புகளையும் அறிமுகப்படுத்தியுள் ளது. இத்தகைய கடுமையான கட்டுப்பாடுகள் தற்காலிகமாக டொலர் வெளியேற்றத்தைத் தடுத்தாலும், உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளையும் நடுத்தர வணிகங்களையும் முடக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளன.



சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்றிட்டப் பிரதானி இவான் பபஜோர்ஜியோவின் அண்மைக்காலக் கூற்றுக்கள், இலங்கையின் கடன் ஸ்திரத்தன்மை இன்னமும் அச்சுறுத்தல் நிலையிலேயே இருப்பதை உறுதிப்படுத்துகின்றன. விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டத்தின் 5 ஆம் மற்றும் 6 ஆம் கட்ட மீளாய்வுகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பா ளர் சபை ஒப்புதல் அளித்து, 695 மில்லியன் டொலர்களை விடுவிக்கத் தீர்மானித்திருப்பது தற்போதைய அநுர அரசாங்கத்தின் கொள்கை அமுலாக்கத்திற்கு கிடைத்த ஒரு சான்றிதழாக இருந்தாலும், கடன்களை மறுசீரமைப்பதில் நிலவும் சவால்கள் இன்னும் தீரவில்லை.

மத்திய கிழக்கு மோதல்களால் உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்ததன் விளைவாக, இலங்கையின் உள்நாட்டுப் பணவீக்கம் கடந்த மார்ச்சில் இருந்த 2.2 சதவீதத்திலிருந்து ஏப்ரலில் 5.4 சதவீதமாக உயர் வடைந்துள்ளது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் எச்சரித்துள்ள படி, உலகளாவிய ரீதியில் இந்த ஆண்டில் 14 பில்லியன் முழு நேர வேலை இழப்புகளுக்குச் சமமான பொருளாதாரப் பாதிப்புகள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன. இது கொரோனா தொற்றுக் காலப் பாதிப்புகளை விடவும் மிக மோசமானது என்பதால், அதன் நேரடித் தாக்கம் இலங்கை யின் ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்புச் சந்தைகளிலும் எதிரொலிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்த இக்கட்டான சூழலில், அநுர அரசாங்கத்தின் அரசியல் எதிர்காலம் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவை அது பொருளாதாரத்தை எவ்வாறு கையாளப் போகிறது என்பதிலேயே தங்கியுள்ளது.

முன்னதாக, நாட்டின் பொருளாதாரம் திருப்தி

தொடர்ச்சி: பக்கம் 14

# தமிழர் தாயகத்தில் வீதிவிபத்துகளால் அதிகரிக்கும் மரணங்கள்

தீபச்செல்வன்



போரில் லட்சம் உயிர்களை இழந்துவிட்ட நிலையில், போருக்குப் பிந்தைய வடக்கு கிழக்கில் வீதி விபத்துகளும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் தாயகத்தை உலுக்குகிறது. குறிப்பாக மோட்டார் சைக்கிள் விபத்துகள் அதிகம் பதிவாகின்றன. போருக்குப் பின்னர் வேகமாக அதிகரித்த வாகனப் பயன்பாடு, இளைஞர்களிடையே கட்டுப்பாடற்ற மோட்டார் சைக்கிள் ஓட்டம், போதைப்பொருள் பாவனை, போதிய வீதி பாதுகாப்பு விழிப்புணர்வுஇல்லாமைஆகியவைஇந்தஅதிகரிப்பிற்கான முக்கிய கார ணங்களாகச் சொல்லப்படுகின்றன. குறிப்பாக வடக்கில் அதிகமான விபத்துகள் மோட்டார் சைக்கிள்களைச் சுற்றியே பதிவாகின்றன என்பது அடிப்படைத் தகவல்கள். பல குடும்பங்கள் போரிலிருந்து உயிர் தப்பி மீள்கட்டமைப்பு வாழ்க்கையில் முன்னேற முயலும் நிலையில், வீதி விபத்துகள் மேலும் இழப்புகளையும் துயரங்களையும் உருவாக்குகின்றன.



## ஒரு இளந்தாயின் இழப்பு

கிளிநொச்சி கரடிபோக்கு – உருத்திரபுரம் வீதியில் அண்மையில் இடம்பெற்ற கோர விபத்து ஒரு குடும்பத்தின் வாழ்வையே சிதறடித்துவிட்டது. தனது மகளை பாடசாலையிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்லவந்த தாயின் பயணம், சில நொடிகளில் மரணப் பயணமாக மாறியது தான் பெருஞ்சோகம். அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். உயிரின் அருமையைக் கூட உணராது, வீதியில் பொறுப்பின்றி போக்குவரத்து விதிகளை மீறி வந்த இளைஞர்களால் ஒரு தாயின் உயிர் காவுகொள்ளப்பட்டுள்ளது.



பெரியளவிலான மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் அப்பகுதியில் மிக வேகமாகச் சுற்றித் திரிந்துள்ளனர். மேலும் அவர்கள் போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தமை வைத்தியசாலை ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பது இந்த விபத்தின் பின்னணியில் இருக்கும் சமூகச் சீரழிவை எடுத்துரைக்கிறது. போதை, வேகம், பொறுப்பின்மை என்பவற்றின் கூட்டுச் செயலே இன்று ஒரு குடும்பத்தை துயரத்தின் இருளில் தள்ளியுள்ளது.

ஒரு தாயை இழந்த பிள்ளையின் மனவலி எந்த வார்த்தைகளாலும் விவரிக்க முடியாது. காலை பள்ளிக்குச் சென்ற மகள், மாலையில் தாயின் கரங்களைப் பற்றிக் கொண்டு வீடு திரும்ப வேண்டிய நிலையில் இருந்தாள். ஆனால் அவள் விபத்தால் மூச்சுப் பேச்சற்றிருக்கும் தாயின் உடலைத்தான் கண்டாள். இளைஞர்கள் வேகத்தை வீரமென நினைக்கும் மனப்போக்கினால் இக் குழந்தை அநாதரவாக்கப்பட்டுள்ளாள்.



## ஒரு சாதனை வீரனை சாகடித்த சாகசம்

சில தினங்களின் முன்பு, பரந்தன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த நகுலேஸ் டினோஜன் (ஹனிஷ்) பற்றிய செய்தியும் எங்கள் மண்ணை வெகுவாக உலுப்பிவிட்டிருக்கிறது. அது ஒரு இளைஞனின் உயிரிழப்பு மட்டுமல்ல அது; போரால் சிதைக்கப்பட்ட ஒரு குடும்பம் மீண்டும் எழுந்து நிற்க முயன்ற கனவுகளின் சிதைவாகவும் மாறியது என்பதுதான் இங்கெ பெரும்வேதனை.

ஹனிஷ் ஒரு முன்னாள் போராளியின் மகன். போரின் வலிகளையும் இழப்புகளையும் தாண்டி தனது பிள்ளைகளை கல்வியாலும் ஒழுக்கத்தாலும் உயர்த்த வேண்டும் என்று போராடிய குடும்பத்தின் மகன். அவரது தந்தை சிறைவாசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னரும் குடும்பத்தை மீள உருவாக்கும் முயற்சியில் வாழ்ந்து வந்தார். ஒரு சகோதரி சட்டத்தரணியாக உயர்ந்துள்ளார். இளைய சகோதரி கல்வியிலும் விளையாட்டிலும் திறமையுடன் முன்னேறிக் கொண்டிருக்கிறார். அந்த குடும்பத்தின் ஒவ்வொரு முன்னேற்றமும், போரின் சாம்பலிலிருந்து மீண்டும் எழும் வாழ்க்கையின் சாட்சியாக இருந்ததைச் சாட்சியெனக் கண்டிருக்கிறேன்.

ஹனிஷின் தங்கை என் வகுப்பு மாணவி. தங்கையின் கல்வி நிலவரத்தை அறிய பெற்றோர் சந்திப்பிற்கு வருவான். அமைதியாக இருப்பான். அதிகம் பேசமாட்டான். மாலை நேரங்களில் மைதானத்தில் ஓட்டப் பயிற்சியில் ஈடுபடுவதை காண்பேன். உடலை வருத்தி, வியர்வையை சிந்தி, எதையோ அடைய வேண்டும் என்ற உறுதியுடன் ஓடிக்கொண்டிருப்பான். “தேசிய மட்டத்தில் சாதிக்க வேண்டும்” என்பதே அவனது கனவு என்று ஒருநாள் சொல்லியிருந்தான்.

ஆனால் அந்தக் கனவுகள் வீதியில் சிதறிப் போயின. துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த அவனை, பின்னால் கட்டுப்பாட்டை இழந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. காயமடைந்த நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவன் பின்னர் உயிரிழந்தான். இந்த விபத்து ஒரு சாதாரண விபத்தல்ல. பொறுப்பற்ற சாகசங்களும் கவனக்குறைவான வீதி நடத்தைகளும் எவ்வளவு கொடிய விளைவுகளை உருவாக்குகின்றன என்பதற்கான இன்னொரு துயரமான சான்று இது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர் கையை விட்டு வண்டியை செலுத்தி சாகசம் செய்ததாக கூறப்படுகிறது. சில நொடிகளின் அலட்சியம், ஒரு குடும்பத்தின் முழு வாழ்க்கையையும் தலைகீழாக மாற்றிவிட்டது. ஒரு தந்தையின் நம்பிக்கை, ஒரு தங்கையின் அன்பு, ஒரு குடும்பத்தின் எதிர்காலம் என்று அனைத்தும் ஒரு கணத்தில் சிதறிவிட்டன. வீதிகளை சாகசங்களை நிரூபிக்கும் இடமாக இன்றைய தலைமுறையினர் கருதுகின்றனரா? அவை உயிர்கள் பயணிக்கும் இடமல்லவா? வேகம், கவனக்குறைவு, அசட்டுத்தனம் ஆகியவை சிலருக்கு விளையாட்டாகத் தோன்றலாம். ஆனால் அதன் முடிவில் ஒரு குடும்பம் வாழ்நாள் முழுவதும் தாங்க முடியாத துயரத்தை சுமக்க நேரிடுகிறது.

## ஏன் இந்த விபத்துகள்?

இளைஞர்கள் மத்தியில் வேகப்போட்டி, சாகச ஓட்டம்,



பாதுகாப்பு தலைக்கவசம் அணியாமை போன்ற இயல்புகள் அதிகரித்துள்ளன. போருக்குப் பிந்தைய மனஅழுத்தங்களும் சமூக மாற்றங்களும் இளைஞர்களின் அபாயகரமான நடத்தைகளில் தாக்கம் செலுத்தியுள்ளன. பல குடும்பங்கள் தங்கள் ஒரே ஆதாரமான இளைஞர்களை இவ்வாறான விபத்துகளில் இழந்து வருகின்றன. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான கடுமையான விபத்துகள் பதிவாகின்றன என்பதையும், அதில் பெரும்பாலானவை 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களைச் சேர்ந்தவை என்பதையும் பல்வேறு அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. இதனால் வீதி பாதுகாப்பு தொடர்பான கல்வி, கடுமையான சட்ட அமுலாக்கம் மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாடு ஆகியவை அவசரத் தேவையாக மாறியுள்ளன.

உலகளாவிய ரீதியில் வீதி விபத்துகள் மிகப்பெரிய பொது சுகாதாரப் பிரச்சினையாகக் கருதப்படுகின்றன. உலக சுகாதார அமைப்பின் தரவுகளின்படி, ஆண்டுதோறும் உலகில் சுமார் 1.19 மில்லியன் மக்கள் வீதி விபத்துகளால் உயிரிழக்கின்றனர். மேலும் 20 முதல் 50 மில்லியன் மக்கள் வரை காயமடைந்து நிரந்தர உடல் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். 5 முதல் 29 வயதுக்குட்பட்டோரின் உயிரிழப்புகளுக்கான முக்கிய காரணிகளில் வீதி விபத்துகள் முதலிடத்தில் உள்ளன. உலகளாவிய மரணங்களில் 92% குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளிலேயே இடம்பெறுகின்றன.

## சிறந்த பயணம்

இலங்கையும் இந்த உலகளாவிய நெருக்கடியிலிருந்து விலகவில்லை. உலக சுகாதார அமைப்பின் கணக்கீடுகளின்படி, இலங்கையில் 100,000 மக்களுக்கு சுமார் 11.5 முதல் 18 வரையிலான வீதி விபத்து மரண விகிதம் காணப்படுகிறது. சிலதரவுகளின்படிஆண்டுதோறும்4,000இற்கும்மேற்பட்டோர் இலங்கையில் வீதி விபத்துகளால் உயிரிழக்கின்றனர். மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் மற்றும் பாதசாரிகளே அதிக ஆபத்தில் உள்ளவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். வேகக்கட்டுப்பாடு மீறல், கவனக்குறைவான ஓட்டம், மது பானம் மற்றும் போதைப்பொருள் பாவனை, போதிய வீதி ஒழுங்கின்மை ஆகியவை முக்கிய காரணங்களாகத் தொடர்ந்து சுட்டிக்காட்டப்படுகின்றன.

உண்மையில் பயணம் என்பது வாழ்வில் ஒரு இனிமையான அனுபவம். பயணம்தான் வாழ்வின் பல உன்னதப் பக்கங்களை திறக்கின்றன. அத்தகைய பயணங்களை பொறுப்புடனும் தூர நோக்குடனும் நாம் மேற்கொள்ள வேண்டும். முப்பது ஆண்டு காலப் போரினாலும் இனப்படுகொலைகளினாலும் பல உயிர்களை இழந்த ஈழத் தமிழ் மக்கள் வீதி விபத்துக்களால் தமிழர் தாயகத்தில் ஏற்படும் மரணங்கள் குறித்தும், அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் அறிந்து கொள்வதும் உரையாடுவதும் விழிப்படைவதும் அவசியமானது.

• • •




முகுந்தன்


சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற கொள்கை ஜனநாயகத்தின் அடிப்படை. இதில் நம்நாடு -(ஏற்க என்மனம் விரும்பாவிட்டாலும்) ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்ற பெயரைக் கொண்டிருந்தாலும், சுதந்திர மடைந்த காலம்தொட்டு இன்றுவரை எம்மவர்க்கு மட்டுமல்ல பெரும்பான்மையினமாகிய சிங்கள மக்களின் சாதாரணபிரஜைக்குக் கூட நீதித்துறை பாராபட்சம் காட்டி வருவதுதான் வேடிக்கை.



ஒற்றுமைப்பட்டிருந்த எமது இனத்தை சீர் குலைத்த வரலாறுகள் தொடர்ந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில் நாம் உதட்டளவில் ஒற்றுமைபற்றிப் பேசாது உளமார ஏற்றுச் செயற்படுவது அவசியம்,




1976.05.14 தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் பெயர்மாற்றம் செய்யப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், தொடர்ந்து வந்த 1977 பொதுத்தேர்தலில் வடக்குக் கிழக்கில் 18 தொகுதிகளில் வெற்றியீட்டி எதிர்க்கட்சியாகிய வரலாறு யாவரும் அறிந்ததே! அதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாறு காணாத வகையில் 141 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சியமைத்ததோடு அதிகார ஆணவத்தால் புதிய அரசியலமைப்பு முறைகளை உருவாக்கி எமக்கு இருந்த உரிமைகள் சிலவற்றையும் இல்லாதொழித்தது.




1981 மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு செல்வாக்கு இருப்பது தெரிந்தே அரச ஆட்சியாளர்களால் திட்டமிட்டு கலவரம் உருவாக்கப்பட்டு யாழ்ப்பாணம் அழிக்கப்பட்டது. இதற்கு முன் 1977இலும் தேர்தல் முடிந்த கையோடு கலவரம் நடந்ததும் அதனால் நாடுமுழுவதும் தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்கள் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.



ஜூன் மாதம் முதலாந்திகதி திங்கட்கிழமை இரவு யாழ் பொதுசன நூலகம் எரிக்கப்பட முன் - முதல்நாள் மே 31 ஞாயிறு இரவு நாச்சிமார் கோவிலடியில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமே எல்லாவற்றுக்கும் மூலகாரணம் எனலாம்.

கூட்டத்தின் பாதுகாப்புக்கென 4 பொலிசார் கடமையாற்றினர். இவர்களிலிருவர் சார்ஜன்ட்கள். இருவர் கான்ஸ்டபிள்கள். குருநாகலைச் சேர்ந்த புஞ்சிபண்டாவும், மீசாலையைச் சேர்ந்த கனகசுந்தரமும் சார்ஜன்ட்கள். குணசிங்காவும், உஸ்மானும் கான்ஸ்டபிள்கள். இரவு 8.15 மணியளவில் யாழ் மாநகர பிதா(மேயர்) ராஜா விஸ்வநாதன் அவர்கள் மேடையில் முழக்கமிட்டுப் பேசிக் கொண்டிருந்தார். அவருடன் மேடையில் தீப்பொறி ஆசிரியர் அந்தனிசில் மாநகரசபை உறுப்பினர் குமாரவேலு ஆகியோர் இருந்தனர். அந்தநேரத்தில்தான் வெடிச்சத்தம் கேட்டு மக்கள் பதட்டமடைந்தனர்.




நான்கு பொலிசாரும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிய நிலையில், காயமடைந்த சார்ஜன்ட் கனகசுந்தரம் மேடையருகில் வந்து ஆகாயத்தைநோக்கிச் சுட்டு பேசிக் கொண்டிருந்த மேயர் விஸ்வநாதனிடம் “யாரோ ஏன்னைச் சுட்டுவிட்டார்கள். கூட்டத்தை முடித்து மக்களைப் போகச் சொல்லுங்கள். எனக்கு ஆஸ்பத்திரிக்குப் போக வாகனம் தாருங்கள்”; என்றார். கூட்டம் உடன் நிறுத்தப்பட்டது. பயத்தினால் மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள். கொஞ்ச நேரம் நாச்சிமார் கோவிலடி அல்லோலகல்லோலப்பட்டது. சார்ஜன்ட் புஞ்சிபண்டா சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார். மற்றய இரண்டு பொலிஸ்காரர்களும் தப்பித்து ஓடினர். திட்டமிட்டே கொண்டுவரப்பட்ட காடையர் கூட்டமும், பொலிசாரும் ஜீப்பிலும் ட்ரக்கிலும் ஆவேசமாக வந்துகுதித்து, கோவிலடியில் நின்ற மக்களையும், வீதிகளில் போய்வந்தவர்களையும் துரத்தி அடித்ததோடு, வாகனங்களில் வந்தோரையும் தாக்கி அவர்களின் வாகனங்களையும் சேதப்படுத்தினர். தீமூட்டி எரித்தனர்.



கோவிலுள்ளே சப்பாத்துக் கால்களுடன் நுழைந்து ஆலயத்தின் பொருட் களையும், வாகனங்களையும் அடித்து நொறுக்கினர். புதிதாகக் கட்டப்பட்டுக்கொண்டிருந்த ராஜகோபுரத்திற்கு பாதுகாப்பாகப் போடப்பட்ட காட்டுத் தடிகள் மற்றும் மறைப் புக்காகக் கட்டப்பட்டிருந்த தென்னோலைகளையும் தீமூட்டி எரித்தனர். தேருக்கும்,

தொடர்ச்சி: பக்கம் 15




வடகிழக்கு மாகாணம் என்பது என்றும் வளமிக்க மாகாணமாகும்.இந்த மாகாணத்தின் வளங்களே வடகிழக்கின் தமிழ் மக்களின் பலமான அடித்தளமாக இருப்பதுடன் அதுவே இன்று சிங்கள தேசத்திற்கு மிகவும் தேவையான விடயமாகவும் மாறியதன் காரணமாகவே வடகிழக்கில் தமிழர்களை நிலைத்திருக்க கூடாது என்ற வகையில் பல்வேறு வகையான செயற்பாடுகள் காலத்திற்கு காலம் முன்னெடுக்கப்படுகின்றது.



குறிப்பாக வடகிழக்கில் காணப்படும் கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் வயலும் வயல்சார்ந்த பகுதிகளும் காடும் காடுசார்ந்த பகுதிகளும் மலையும் மலைசார்ந்த பகுதிகளும் இயற்கையின் தமிழர்களின் பொருளாதாரத்தின் ஊற்றாக கருதப்படுகின்றது.

இதன்காரணமாகவே காலத்திற்கு காலம் தமிழர் தாயகத்தினை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. வடகிழக்கில் காணப்படும் பணப்பயிர்கள் மீது சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் எப்போதும் கணக்கிடமுடியாத பார்வையிருந்தேவருகின்றது.



கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் மீன்பிடி,விவசாயம் உட்பட பல்வேறு துறைகள் முதன்மை பெற்றிருந்தாலும் கிழக்கில் மரமுந்திரிகை செய்கையானது பாரியளவில் வருமானம் ஈட்டும்பொருளாதார பயிராக காணப்பட்டது.இந்த நாட்டு காலனித்துவத்திற்கு உட்பட்ட காலத்தில் கிழக்கின் கரையோரப்பகுதிகளிலே இந்த மரமுந்திரியை செய்கைசெய்யப்பட்டு அவை வெளி நாடுகளுக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன. மரமுந்திரிகையினை அதிகமானோர் வெள்ளை தங்கம் என்று கூறுகின்றார்கள். காரணம் விதைகளிலே அதிக விலை கூடியதும். அதிகமானோரால் விரும்பி சுவைத்து உண்ணக்கூடியதும் என்பதற்காக. குறைந்த செலவில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களில் மரமுந்திரிகை செய்கையும் ஒன்று என்பதாலும் கடும் வறட்சியை தாங்கும் முந்திரியை பயிரிட்டால், தொடர்ந்து 25 முதல் 30 ஆண்டுகளுக்கு, வருமானம் கிடைக்கும் என்பதாலும் பல நாடுகளில் தங்கள் அந்நிய செலாவணியை அதிகரிப்பதற்காக மர முந்திரிகையினை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்றார்கள்.

இலங்கையின் விவசாயப் பொருளாதாரத்திலும் ஏற்றுமதித் துறையிலும் மரமுந்திரிகைச் செய்கை (கஜு) முக்கிய இடத்தைப் வகிக்கின்றது. குறிப்பாக, இலங்கையின் கிழக்கு மாகாணம் நீண்ட கடற்கரையோரங்களையும், மணற்பாங்கான மண் வளத்தையும் கொண்டிருப்பதால், மரமுந்திரிகைச் செய்கைக்கு மிகவும் உகந்த ஒரு பிராந்தியமாகத் திகழ்கிறது.கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த மரமுந்திரிகை செய்கையானது அதிகளவில் யுத்ததிற்கு முந்தியகாலத்தில் காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு, கிராண்குளம், களுவாஞ்சிகுடி, செங்கலடி மற்றும் வாகரை போன்ற பிரதேசங்கள் மரமுந்திரிகைச் செய்கையில் முன்னணியில் திகழ்ந்திருக்கின்றன. யுத்த காலத்தில் செய்கைபண்ணமுடியாத சில பகுதிகள் கைவிடப்பட்ட நிலையில் பெரும்பாலான பகுதிகளில் மரமுந்திரிகை செய்கைபண்ணப்பட்டுவந்த நிலையில் வாகரை போன்ற பகுதிகளிலும் பாரியளவில் மரமுந்திரிகை செய்கை முன்னெடுக்கப்பட்டுவந்தன.



யுத்தத்திற்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் செழிப்பாகக் காணப்பட்ட மரமுந்திரிகை தோட்டங்கள், போரின் உச்சக் கட்டத்தின்போது பாரியளவில் அழிக்கப்பட்டன. நாட்டின் பாதுகாப்புப் பிரிவினரால் பிரகடனப்படுத்தப்பட்ட அதிஉயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் பல பிரதான மரமுந்திரிகை தோட்டங்கள் உள்வாங்கப்பட்டதால், விவசாயிகளால் அவற்றைப் பராமரிக்க முடியாமல் போனது. மேலும், பயிர் நிலங்களில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடிகள் காரணமாக, போருக்குப் பின்னரும் நீண்ட காலத்திற்கு மக்கள் அந்தப் பகுதிக்குள் நுழைய அஞ்சினர்.

யுத்தக் களமுனைகளில் பாதுகாப்பு வியூகங்களுக்காகவும், இராணுவ முகாம்களை அமைப்பதற்காகவும், மரங்கள் அடர்ந்த பல மரமுந்திரிகை தோட்டங்கள் வெட்டி அழிக்கப்பட்டன. மக்கள் தங்கள் சொந்த நிலங்களை விட்டு இடம்பெயர்ந்ததால், பல தசாப்தங்களாக மரங்கள் எவ்வித பராமரிப்புமின்றிக் கைவிடப்பட்டன. இதனால் நோய்த்தாக்கங்கள் அதிகரித்து, மரங்களின் உற்பத்தித் திறன் முற்றாக வீழ்ச்சியடைந்தது.

மரமுந்திரிகைச் செய்கை என்பது ஒரு பருவகாலப் பயிராக இருந்தாலும், கிழக்கு மாகாணத்தின் கிராமப்புற ஏழை மக்களுக்கு, குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இதுவொரு முக்கிய வாழ்வாதாரமாக இருந்தது. யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவு, இப்பகுதி மக்களின் நேரடி வருமானத்தை இல்லாமல் ஆக்கியதுடன், மரமுந்திரிகை சார்ந்த உள்ளூர் கைத்தொழில்களையும் முடக்கியது. இதன் விளைவாக, இப்பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி பல தசாப்தங்கள் பின்னோக்கித் தள்ளப்பட்டது.

குறிப்பாக வாகரை பிரதேசத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் முந்திரிகை செய்கை செய்யப்பட்ட பாரிய நிலப்பரப்புகள் இராணுவத்தினரால் முகாமாக கையப்படுத்தப்பட்டதனால் அதனை நம்பியிருந்த மக்களின் வாழ்வாதாரம் முற்றாக இழக்கப்பட்டன.வாகரை மருதங்கேணி பகுதியில் சுமார் 1500 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவமுகாமுக்கு உள்வாங்கப்பட்டது.இந்த நிலப்பரப்பு முற்றுமுழுதாக மரமுந்திரிகை செய்கைபண்ணப்பட்ட நிலப்பரப்பாக உள்ளதனால் அதனை நம்பியிருந்த மக்களின் வாழ்வாதாரம் முற்றாக இழக்கப்பட்டுள்ளது.



மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்த வரையில் கடந்த காலத்தில் சுமார் 2500க்கும் அதிகமான ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் இன்றைய காலப்பகுதியில் வெறும் 250க்கும் சற்று அதிகமான பகுதிகளிலேயே மரமுந்திரிகை செய்கை முன்னெடுக்கப்படுகின்றது.மரமுந்திரிகை செய்கைக்குரியதாக ஒதுக்கப்பட்ட காணிகளையும் அரசு வலுக்கட்டாயமாக வேறு தேவைகளுக்கு ஒதுக்கியதன் காரணமாக மரமுந்திரிகை செய்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்த வரையில் மரமுந்திரிகை செய்கையில் 95வீதமானவர்கள் தமிழ் மக்களே ஈடுபட்டுவந்ததன் காரணமாக அது தொடர்பில் முழுமையான அக்கறையினை இலங்கை அரசுகள் செலுத்தவில்லை.மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் உள்ளபோதிலும் அது பெயரளவில் மட்டுமே இயங்கும் நிலைமையினை காணமுடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம், புதுக்குடியிருப்பு, தாழங்குடா பகுதிகளில் பெருமளவான குடும்பங்கள் இந்த மரமுந்திரிகை செய்கையினை நம்பியே இருந்தது.ஆனால் அவர்களின் தொழிலுக்கு இந்த அரசுகள் சரியான வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்காத நிலையில் இன்று பெருமளவான செய்கைக்காணிகள் வேறு திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் நிலைமையினை

தொடர்ச்சி: பக்கம் 15




மருதன் ராம்

இலங்கையின் தேயிலைத் தொழில் உலகளவில் புகழ் பெற்ற ஒன்றாகக் கருதப்படுகிறது. “சிலோன் டீ” என்ற பெயரில் உலக சந்தையில் விற்பனை செய்யப்படும் தேயிலை, நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய வெளிநாட்டு வருமானத்தை ஈட்டித் தருகிறது. ஆனால் இந்த உலகப் புகழின் பின்னால், குறிப்பாக தனியார் தேயிலைத் தோட்டங்களில் உழைக்கும் மலையகத் தமிழர் சமூகத்தின் துயரமான வாழ்வும், மனித உரிமை மீறல்களும் மறைக்கப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமை அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள விரிவான அறிக்கை கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது. 2024 ஜனவரி முதல் 2026 ஜனவரி வரையிலான ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை, இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள தனியார் தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் மனிதாபிமானமற்ற சூழல்களை வெளியில் எடுத்துக்காட்டியுள்ளது.




குறிப்பாக மலையகத் தமிழர் சமூகத்தினருக்கு எதிராக இடம்பெறும் மிரட்டல், உடல் ரீதியான வன்முறை, கடன் அடிமைத்தனம், ஊதிய மோசடி, சுதந்திரக் கட்டுப் பாடுகள் மற்றும் மனித வாழ்வுக்கு பொருத்தமற்ற குடியிருப்பு சூழல்கள் ஆகியவை அனைத்தும் “கட்டாயத் தொழிலின் அடையாளங்கள்” என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அளவுகோல்களுடன் ஒப்பிட்டு இந்த தகவல்கள் வெளி யிடப்பட்டுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கொண்ட இந்த ஆய்வு இலங்கையின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அமைந்துள்ள 45 தனியார் தேயிலைத் தோட்டங்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது. ஆய்வின் போது 159 தொழிலாளர்களுடன் நேர்காணல்கள் நடத்தப்பட்டதுடன், 65 தொழிலாளர்கள் பங்கேற்ற 15 குழு ரீதியான கலந்துரையாடல்களும் இடம்பெற்றதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும், இரண்டு தோட்ட முகாமையாளர்களும் மூன்று மேற்பார்வையாளர்களும் சந்திக்கப்பட்டனர். இந்த ஆய்வு ஒரு தனிப்பட்ட சம்பவத்தை மட்டும் எடுத்து ரைப்பதல லாது மாறாக, இலங்கையின் தேயிலைத் தொழில் துறையில் பல தசாப்தங்களாக நிலவி வரும் அமைப்புசார்ந்த சுரண்டல் முறையை உலகின் முன் நிறுத்தியுள்ளது

### மலையகத் தமிழர்கள் – வரலாற்றிலிருந்து தொடரும் ஒடுக்குமுறை

மலையகத் தமிழர்கள் என்பது பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் தென் பகுதிகளிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களின் சந்ததியினரை குறிக்கிறது. 19ஆம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் தேயிலை, கோப்பி மற்றும் இறப்பர் தோட்டங்களில் வேலை செய்ய அவர்களை இலங்கைக்கு அழைத்து வந்தனர். இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகும், இந்த சமூகத்தின் நிலைமை மாற்றமடையவில்லை.

குடியுரிமை மறுப்பு, கல்வி வசதியின்மை, நில உரிமை இல்லாமை, அரசியல் புறக்கணிப்பு போன்ற பல் வேறு காரணங்களால் மலையகத் தமிழர்கள் தொடர்ந்து சமூகத்தின் விளிம்புநிலையிலேயே தள்ளப்பட்டனர். இன்று கூட பெரும்பாலான மலையகத் தமிழர்கள் தாங்கள் வேலை செய்யும் தோட்டங்களின் மீதுதான் வாழ்வாதாரத்திற்கும் குடியிருப்பிற்கும் முழுமையாக சார்ந்திருக்கின்றனர்.

இந்த பொருளாதார சார்பு அவர்களைத் தங்கள் உரிமைகள் குறித்து குரல் கொடுக்க முடியாத நிலையிலேயே வைத்திருக்கிறது. சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல தொழிலாளர்களின் சாட்சியங்கள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. 45 தோட்டங்களில் 15 தோட்டங்களில் பணிபுரியும் தொழி லாளர்கள் தாங்கள் நேரடியாக உடல் மற்றும் வாய்வழி வன்முறைகளுக்கு உள்ளானதாக கூறியுள்ளனர்.



ஒரு தொழிலாளர் தனது அனுபவத்தை விவரிக் கையில், “நீங்கள் வேலை செய்யவில்லை என்றாலோ அல்லது கொடுக்கப்பட்ட இலக்கை எட்டவில்லை என்றாலோ அவர்கள் அடிப்பார்கள். கைகளாலும் கால்களாலும் மட்டு மல்ல, குச்சிகளாலும் அடிப்பார்கள். சிலரை பார்க்க முடியாத அளவுக்கு அடித்திருக்கிறார்கள். இது இன்னும் நடக்கிறது.” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்த சாட்சியம் தனிப்பட்ட சம்பவமல்லாது மாறாக தோட்ட நிர்வாகத்தில் பயமும் கட்டுப்பாடும் உருவாக் கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறையாகவே சர்வதேச மன்னிப்புச் சபை விவரிக்கிறது. இலங்கையின் மத்திய பகுதியில் உள்ள மலையக தேயிலைத் தோட்ட தொழிலா ளர்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் தெற்கில் உள்ள தேயிலைத் தொழிலாளர்களுக்கு விதிக்கப்படும் உழைப்பு இலக்குகள் கூட மனிதாபிமானமற்றவை என அறிக்கை


தொடர்ச்சி: பக்கம் 16




ஹோர்முஸ் ஜலசந்தியில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், பந்தர் அப்பாஸ் அருகே அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது உயிரிழப்புகளோ சேதங்களோ ஏற்படவில்லை என ஈரான் தெரிவித்துள்ளது. ஹோர்முஸ் ஜலசந்தியில் உள்ள தனது படைகளுக்கும் கடல்வழிப் போக்குவரத்திற்கும் இராணுவ அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறி, ஈரானின் பந்தர் அப்பாஸ் துறைமுகம் அருகே அமெரிக்கா புதிய தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதல்களால் உயிரிழப்புகளோ சொத்து சேதங்களோ ஏற்படவில்லை என்று ஈரானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



உலகின் முக்கிய கப்பல் போக்குவரத்துப் பாதையான ஹோர்முஸ் ஜலசந்தியைச் சுற்றி பதற்றம் அதிகரித்து வரும் வேளையில் இந்த சமீபத்திய நிகழ்வுகள் நடந்துள்ளன. இந்த விடயம் ஈரான் மற்றும் அமெரிக்கா இடையேயான பேச்சுவார்த்தைகள் மற்றும் மோதல்களில் ஒரு முக்கிய பதட்டப் புள்ளியாக மாறியுள்ளது,



**ஈரானில்:**

ஈரான்-அமெரிக்க பேச்சுவார்த்தைகளின் முக்கிய பதட்டப் புள்ளிகளில் ஒன்றான பந்தர் அப்பாஸ் துறைமுகம் மற்றும் ஹோர்முஸ் ஜலசந்திக்கு அருகே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், செவ்வாய்க்கிழமை முதல் இரண்டாவது முறையாக தாக்குதல்கள் நிகழ்ந்ததாக ஈரானிய அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இத்தாக்குதல் சர்வதேச சட்டம் மற்றும் கடல்வழிப் போக்குவரத்துச் சட்டங்களை மீறியதாக இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படை (IRGC) செவ்வாயன்று சுமத்திய குற்றச்சாட்டுகளை அரசு தொலைக்காட்சியும் நினைவுபடுத்தியது.

ஈரானின் தஸ்னிம் செய்தி நிறுவனம், ஒரு இராணுவ வட்டாரத்தை மேற்கோள் காட்டி தனது ரேடாரை செயலிழக்கச் செய்துவிட்டு ஹோர்முஸ் ஜலசந்தியைக் கடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு அமெரிக்க எண்ணெய்க் கப்பல் மீது (IRGC) கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறியது. பின்னர், பந்தர் அப்பாஸ் அருகே அமெரிக்கப் படைகள் பதிலடித் தாக்குதல் நடத்தியதாகவும், இந்த தாக்குதல்களால் எந்த உயிரிழப்போ அல்லது சொத்து சேதமோ ஏற்படவில்லை என்றும் அது மேலும் கூறியது.

**போர் இராஜதந்திரம்:**

ஈரான் இந்தக் கோரிக்கைகளை மீண்டும் மீண்டும் நிராகரித்த போதிலும், எந்தவொரு ஒப்பந்தத்தின் கீழும் ஈரானுக்குத் தடைகளில் இருந்து எந்தத் தளர்வும் கிடைக்காது என்றும், தெஹ்ரான் தனது செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பை ஒப்படைக்கும் என்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தினார். ஒரு ஒப்பந்தம் நெருங்கி வருவதாக ஊகங்கள் அதிகரித்து வரும் நிலையிலும், இந்த முரண்பாடான அறிக்கைகள் தொடரும் இராஜதந்திர முட்டுக்கட்டையை எடுத்துக்காட்டுகின்றன.

அமெரிக்க திறைசேரித் துறை, ஹோர்முஸ் ஜலசந்தி வழியாகக் கப்பல் போக்குவரத்து கோரிக்கைகளை நிர்வகிப்பதற்காக தெஹ்ரான் உருவாக்கிய அமைப்பைக் குறிவைத்து ஈரானின் பாரசீக வளைகுடா ஜலசந்தி ஆணையத்தைத் தனது தடைப் பட்டியலில் சேர்த்துள்ளது. போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடரும் நிலையில், ஈரான் மீது பொருளாதார அழுத்தத்தை அதிகரிக்கும் ட்ரம்ப் நிர்வாகத்தின் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.



**வளைகுடாவில்:**

நாடு முழுவதும் எச்சரிக்கை ஒலிகள் ஒலித்த நிலையில், எதிரியின் ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் தங்கள் வான் பாதுகாப்பு அமைப்புகள் இடைமறித்ததாகக் குவைத் இராணுவம் தெரிவித்துள்ளது. மேலும் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு அதிகாரிகள் நாட்டு மக்களுக்கு வலியுறுத்தினர், மேலும் வெடிப்புச் சத்தங்கள் இடைமறிப்பு மண்டலத்தால் ஏற்பட்டதாகக் கூறினார்கள்.

**அமெரிக்காவில்:**

வெள்ளை மாளிகையிலிருந்து செய்தி அளித்த மானுவல் ரபாலோ, இடைக்காலத் தேர்தல்களுக்கு முன்னதாக சட்டவிரோதக் குடியேற்றம், பணவீக்கம் மற்றும் பொருளாதாரம் குறித்தும் விவாதங்கள் நடந்தபோதிலும், ட்ரம்ப்பின் சமீபத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஈரான் பேச்சுவார்த்தைகள் முக்கிய இடத்தைப் பிடித்திருந்ததாகக் கூறினார். ஈரானுடன் ஒரு "சிறந்த ஒப்பந்தத்தை" விரும்புவதாகக் கூறிய ட்ரம்ப், தமது நலன்களுக்குக் குறைவான அல்லது பொருத்தமற்ற எதிலிருந்தும் அமெரிக்கா விலகிவிடும் என்றும் எச்சரித்தார்.

ஹோர்முஸ் ஜலசந்தியைக் கட்டுப்படுத்த ஈரானுடன், ஓமான் ஒத்துழைத்தால், வாஷிங்டன் அதற்கு எதிராகப் பலத்தைப் பயன்படுத்தும் என்று கூறிய ட்ரம்ப், அமைச்சரவைக் கூட்டத்தின் போது "யாரும் அதைக் கட்டுப்படுத்தப் போவதில்லை" என்று அறிவித்தார். ஈரான்-அமெரிக்கப் பேச்சுவார்த்தைகளில் நீண்டகால அமெரிக்க நட்பு நாடாகவும் மத்தியஸ்தராகவும் விளங்கும் ஓமான், தெஹ்ரானுடன் இணைந்து அந்த மூலோபாய நீர்வழியை மேற்பார்வையிட முன்மொழியாததால், இந்தக் கருத்துக்கள் கவனத்தை ஈர்த்தன.

ஈரானுக்கு எதிரான அமெரிக்க போர் நிறுத்தத்தை 60 நாட்களுக்கு நீட்டிப்பதற்கும், போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கும், அமெரிக்காவும் ஈரானும் ஒரு பூர்வாங்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MOU) எட்டியுள்ளதாக அதிகார வட்டங்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழில்: ஸ்ரீவன் புஸ்பராஜா. க

அமெரிக்கா ஹோர்முஸ் ஜலசந்தியை மீண் டும் திறக்கத் தீவிரமாக முயன்று வரும் நிலையில், அமைச்சரவைக் கூட்டத்தின் போது டொனால்ட் டிரம்ப், ஓமான் "ஒழுங்காக நடந்துகொள்ளத்" தவறினால் அந்நாட்டை "வெடி வைத்துத் தகர்த்துவிடுவேன்" என்று சர்வசாதாரணமாகக் குறிப்பிட்டு மிரட்டியுள்ளார்.



ஈரானுக்கு எதிரான அமெரிக்க-இஸ்ரேல் போர் தொடங்கியதிலிருந்து ஏறக்குறைய மூடப்பட்டுள்ள இந்த முக்கிய நீர்வழிப்பாதை வழியாகச் செல்லும் கப்பல்களுக்கு கூட்டாக சுங்கக் கட்டணம் வசூலிப்பது குறித்து ஈரான் மற்றும் ஓமானுக்கு இடையே பேச்சுவார்த்தைகள் நடந்ததாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் இந்த மிரட்டலை விடுத்துள்ளார்.

**லெபனான் மற்றும் காசாவில்:**

தெற்கு லெபனானில் உள்ள டயர் நகரம் மற்றும் ஜக்கோக் அல்-முஃப்தியின் சில பகுதிகளில் வசிக்கும் மக்களை உடனடியாக அப்பகுதியை விட்டு வெளியேறி, இஸ்ரேலிய எல்லையிலிருந்து சுமார் 40 கி.மீ (25 மைல்கள்) தொலைவில் உள்ள ஜஹ்ரானி நதிக்கு வடக்கே செல்லுமாறு இஸ்ரேலிய இராணுவம் உத்தரவிட்டுள்ளது. குறிவைக்கப்பட்ட கட்டடங்கள், ஹிஸ்புல்லாவின் தளங்களுக்கு அருகில் அமைந்துள்ளதாக இஸ்ரேல் கூறியதுடன், அப்பகுதியில் தங்கியிருப்பவர்கள் ஆபத்து ஏற்படும் என்றும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

தெற்கு லெபனான் மற்றும் வடக்கு இஸ்ரேல் முழுவதும் இஸ்ரேலியப் படைகள், டாங்கிகள், பொறியியல் வாகனங்கள் மற்றும் இராணுவ நிலைகளைக் குறிவைத்து பலமான தாக்குதல்களைத் தொடங்கியதாக ஹிஸ்புல்லா அறிவித்துள்ளது. இந்தத் தாக்குதல்களில் குறுகிய தூர மோதல்கள், மெர்காவா டாங்கிகள் மற்றும் அயர்ன் டோம் தளங்கள் மீதான தாக்குதல்கள், அத்துடன் கலிலேயாவில் உள்ள நிலைகள் மீதான ட்ரோன் தாக்குதல்கள் ஆகியவை அடங்கும் என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு இஸ்ரேலியத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸின் ஆயுதப் பிரிவுத் தளபதி முகமது ஓதேவின் உடலைச் சுமந்துகொண்டு, நூற்றுக்கணக்கான பாலஸ்தீனியர்கள் காசா நகரம் வழியாக ஊர்வலம் சென்றனர். போர் நிறுத்தம் இருந்தபோதிலும் அக்குழுவின் மூத்த தலைவர்களை இஸ்ரேல் தொடர்ந்து குறிவைத்துத் தாக்கி வரும் நிலையில் அவரது முன்னோடியான இஸ் அல்-தின் அல்-ஹத்தாத்தை கொன்ற ஒரு வாரத்திற்குப் பிறகு ஓதேவின் மரணம் நிகழ்ந்துள்ளது.

-நன்றி அல்ஜஸிரா-




தமிழில்: **ஆர்தீகன்**

கரீபியன் பகுதியில் போரின் வாசனையை வீசத் தொடங்கியுள்ளது. வாஷிங்டன் கியூபாவைச் சுற்றி தனது பொரு ளாதாரத் தடைகளை இறுக்கி, அப்பகுதிக்குக் கூடுதல் இராணுவ படைக்கலங்களை அனுப்பி, மேலும் மேலும் இறுதி எச்சரிக்கை மொழியைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ள நிலையில், ஊடகங்களும் கொள்கை வகுப்பு வட்டாரங்களும் அந்தத் தீவில் அமெரிக்காவின் நேரடித் தலையீட்டிற்கான சாத்தியக்கூறு குறித்து தீவிரமாக விவாதிக்கத் தொடங்கியுள் ளன. ரவுல் காஸ்ட்ரோவுக்கு எதிரான புதிய குற்றச்சாட்டுகளின் அலை மற்றும் கியூபாவின் கடற்கரைக்கு அப்பால் யுஎஸ்எஸ் நிமிட்ஸ் விமானம் தாங்கிப் போர்க்கப்பல் குழுவின் பிர சன்னம் ஆகியவை மட்டுமல்லாமல், பதற்றத்தை அதிகரிப் பதற்கான பரந்த தர்க்கமும் இதற்கான தூண்டுதலாக அமைந்துள்ளது: எரிசக்தித் தடை, 'ட்ரோன் அச்சுறுத்தல்' என்று சொல்லப் படுவது பற்றிய சொல்லாடல்கள், மற்றும் ட்றம்ப் நிர்வாகம் தனது கடுமையான வெளியுறவுக் கொள்கையின் அடுத்த இலக்காக கியூபாவைக் கருதுகிறது என்ற வளர்ந்து வரும் கருத்து ஆகியவை இதில் அடங்கும்.



அமெரிக்க நிர்வாகம் ஒரு முழு அளவிலான இராணுவ நடவடிக்கைக்கான சாத்தியக்கூறை அதிகாரப்பூர்வமாக மறுத்தாலும், நெருக்கடியின் போக்கே அத்தகைய ஒரு சூழ்நிலையை நிராகரிப்பதை கடினமாக்குகிறது. இந்த மோதல் ஒரு இராணுவக் கட்டத்திற்குள் நுழைந்தால், அமெரிக்காவின் நடவடிக்கைகள் எப்படி இருக்கும்? வாஷிங்டன் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கிய 'துல்லியத் தாக்குதலுடன்' தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளுமா?, கியூபாவின் உள்கட்டமைப்பை முடக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பெரிய அளவிலான வான்வழித் தாக்குதலைத் தொடங்குமா?, அல்லது கடற்படை முற்றுகை மற்றும் பொருளாதார நெருக்கடி மூலம் தனது நோக்கங்களை அடைய முயற்சிக்குமா? கியூபாவிற்கு எதிரான ஒரு சாத்தியமான அமெரிக்க நடவடிக்கையின் முக்கிய சாத்தியக்கூறுகள், அவற்றின் இராணுவக் காரணங்கள் மற்றும் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய்வோம்.




2026-ல், அமெரிக்க-கியூபா உறவுகள் பல தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு உச்சகட்ட பதற்றத்தை எட்டியுள்ளன. ஜனவரி 29, 2026 அன்று அமெரிக்க ஜனாதிபதியால் கையெழுத்திடப்பட்ட, "கியூபா அரசாங்கத்தால் ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளுதல்" என்ற தலைப்பிலான ஒரு நிர்வாக ஆணை, ஹவானாவின் கொள்கைகளை அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தலாக வகைப் படுத்தியது. கியூபா, பயங்கரவாதத்திற்கு நிதியுதவி அளிக்கும் நாடுகளின் பட்டியலில் நீடிக்கிறது, இது அதனை சர்வதேச நிதி அமைப்பின் பெரும்பகுதியிலிருந்து துண்டித்து, வெளிநாட்டு முதலீடுகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்துகிறது. இந்தச் சூழலில், ஏறக்குறைய எந்தவொரு சாத்தியக்கூறும் சாத்தியமா கும்.

வாஷிங்டனின் கண்ணோட்டத்தில், ஒரு இராணுவத் தீர்வுக்கான அடித்தளம் ஏற்கனவே உள்ளது. 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம், அமெரிக்க தெற்கு கட்டளைப் பிரிவின் தளபதியான ஜெனரல் பிரான்சிஸ் டோனோவன், காங்கிரஸிடம் அளித்த சாட்சியத்தின்படி, ஒருங்கிணைந்த பிராந்தியப் படைகள், கடற்படை, வான்வழி கண்காணிப்பு மற்றும் சிறப்பு நடவடிக்கைப் பிரிவுகளைப் பயன்படுத்தி போதைப்பொருள்-பயங்கரவாத வலையமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடர்கின்றன. குவாண்டநாமோ விரிகுடாவில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளம், இப்பகுதியில் படைகளை நிலைநிறுத்துவதற்கான ஒரு முக்கிய தளமாகத் தொடர்கிறது. அமெரிக்காவின் பிரதான நிலப்பரப்பிலிருந்தும் கூடுதல் துருப்புக்கள் அனுப்பப் படலாம். பத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க போர்க்கப்பல்களும், குறைந்தது 10,000 அமெரிக்கப் பணியாளர்களும் தற்போது கரீபியன் பகுதியில் செயல்பட்டு வருகின்றனர்.




கியூபாவைப் பொறுத்தவரை, அது சுமார் 50,000 ஆயுதமேந்திய வீரர்களைக் கொண்ட ஆயுதப் படைகளைப் பராமரிக்கிறது. அந்நாடு 200 டாங்கிகள் வரையிலும், பல்வேறு வகையான 500க்கும் மேற்பட்ட பீரங்கி அமைப்புகளையும், ஒரு சிறிய கடற்படையையும், ஒரு விமானப்படையையும், மற்றும் வான் பாதுகாப்புப் பிரிவுகளையும் கொண்டுள்ளது. மிக முக்கியமாக, கியூபத் தலைமை, முழுமையான குடிமக்கள் அணிதிரட்டல், இராணுவத்தைப் பொருளாதாரம் மற்றும் அரசியல் அமைப்புடன் ஒருங்கிணைத்தல், மற்றும் ஒரு நீண்டகால சமச்சீரற்ற தற்காப்பு நடவடிக்கைக்குத் தயாராகுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய "முழு மக்கள் போர்" (Guerra de Todo el Pueblo) என்ற கோட்பாட்டைத் தொடர்ந்து பெரிதும் நம்பியுள்ளது.

## சூழ்நிலை 1: வரையறுக்கப்பட்ட 'துல்லியமான' நடவடிக்கை

முதலில் நினைவுக்கு வரும் சூழ்நிலையானது, வெனிசுலாவுக்கு எதிரான முந்தைய அமெரிக்க நடவடிக்கைகளை ஒத் திருக்கிறது: முக்கிய தலைவர்கள், கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள், மற்றும் தகவல் தொடர்பு உள்கட்டமைப்புகளைச் செயலிழக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு வரையறுக்கப்பட்ட 'துல்லியமான' நடவடிக்கை. அத்தகைய நடவடிக்கையில், அமெரிக்காவின் நான்காவது கடற்படைப் போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து ஏவப்படும் டோமஹாக் குரூஸ் ஏவுகணைத் தாக்குதல்கள், MQ-9 ரீப்பர் ஆளில்லா விமானத் தாக்குதல்கள், மற்றும் சிறப்பு அதிரடிப் படைகளின் திடீர்த் தாக்குதல்கள் ஆகியவை பெரும்பாலும் அடங்கும்.



இதன் விளைவுகள் என்னவாக இருக்கும்? குவாண்டநாமோ வளைகுடா தளத்திற்கு எதிராக கியூபாவின் இராணுவம் சமச்சீரற்ற முறையில் பதிலடி கொடுப்பதற்கான சாத்தியக்கூறும், பலரும் 'பாதுகாப்பு நடவடிக்கை' என்று கருதும் இதற்கு பரந்த சர்வதேசக் கண்டனம் எழுவதும் மிகப்பெரிய கவலையாக இருக்கும். கோட்பாட்டளவில், ஒரு வரையறுக்கப்பட்ட தாக்குதல் கூட மிகப் பெரிய மோதலாக உருவெடுக்கக்கூடும். இது வாஷிங்டனைக் கூடுதல் துருப்புக்களையும் வளங்களையும் ஈடுபடுத்த நிர்பந்திக்கும் அதே வேளையில், குவாண்டநாமோவைச் சுற்றியுள்ள மற்றும் கியூபாவின் எல்லைக்குள் ஆழமாக நடக்கும் தரைவழிப் போர்களில் சிக்க வைத்துவிடும்.



அந்த ஆபத்து உண்மையானது. ஆனால், ஒரு இலக்கு வைக்கப்பட்ட நடவடிக்கை குறைந்த பாதிப்புகளுடன் அதன் நோக்கங்களை அடையவும் வாய்ப்புள்ளது – குறிப்பாக, வெனிசுலாவில் அமெரிக்க சிறப்புப் படைகள் பெற்றதாகக் கூறப்படும் அதே அளவிலான செயற்பாட்டு வெற்றியை இங்கும் பெற்றால் இது சாத்தியமாகும்.

## சூழ்நிலை 2: முழு அளவிலான வான்வழித் தாக்குதல்

இரண்டாவது சூழ்நிலையானது, ஈரானுக்கு எதிரான அமெரிக்க-இஸ்ரேலிய கூட்டுத் தாக்குதல்களை மிகவும் ஒத்திருக்கலாம். கியூபாவின் வான் பாதுகாப்புகளை ஒடுக்குவதற்கும், இராணுவ உள்கட்டமைப்பை அழிப்பதற்கும், அந்நாட்டின் ஆயுதப் படைகள் மற்றும் அரசியல் தலைமையின் மன உறுதியைக் குலைப்பதற்குமான ஒரு பெரிய அளவிலான வான்வழி நடவடிக்கை.

தொடர்ச்சி: பக்கம் 14

## அநுர அரசாங்கத்தின் ... தொடர்ச்சி...

கரமான பாதையில் பயணிப்பதாகக் கூறிவந்த அரசாங்கம், இப்போது நிலைமையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு ஆபத்துக்களை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுவது போல, டொலரின் பெறுமதி மேலும் அதிகரித்து, நிலைமை கைமீறிச் சென்றால் அது மற்றுமொரு மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுக்கலாம். கடந்த கால கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கமும் கொரோனா பெருந்தொற்று என்ற உலகளாவிய புற அதிர்ச்சியைச் சரியாகக் கையாளத் தவறியதாலேயே, மக்களின் கடும் கோபத்திற்கு ஆளாகி வீழ்த்தப்பட்டது.

டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக யுகத்தில், பொருளாதாரச் சுமைகளால் விரக்தியடையும் மக்களின் கொந்தளிப்பை ஒருங்கிணைத்து ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்துவது மிகவும் எளிதானதாக மாறியுள்ளது. எனவே, அநுர அரசாங்கம் வீராப்புப் பேச்சுக்களைக் கைவிட்டு, வட்டிவீத உயர்வுகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதன் மூலம் மட்டுமே வரவிருக்கும் தட்டுப்பாடுகள் மற்றும் விலை உயர்வுகளிலிருந்து மக்களைப் பாதுகாத்து, நாட்டின் பொருளாதாரக் கடிவாளத்தை தனது கைகளில் வைத்திருக்க முடியும்.

## சவப்பெட்டியில் அடைத்து ... தொடர்ச்சி...

“அவர்கள் விரும்பிய தகவல்களைப் பெறுவதற்காக, நான் இறந்துவிட்டதைப் போல என்னை உணர வைக்க அவர்கள் விரும்பியது போல் தோன்றியது,” என்று நப்ஹான் கூறினார். “நான் அந்த சவப்பெட்டிக்குள் 15 நாட்கள் இருந்தேன். ஒரு இறந்த உடலுக்குள் நான் உயிருடன் இருப்பது போல் உணர்ந்தேன்.”

பணம், வெளிநாட்டுப் பயணம் மற்றும் தனது தாய்க்கு மருத்துவ சிகிச்சை வாய்ப்புகள் ஆகியவற்றை வழங்குவதாகக் கூறி, இஸ்ரேலியப் படைகள் தன்னை ஒத்துழைக்க வற்புறுத்த முயன்றதாகவும், ஆனால் அனைத்தையும் தான் மறுத்துவிட்டதாகவும் அந்த முன்னாள் கைதி கூறினார்.

இஸ்ரேல் தனது காவலில் உள்ள பாலஸ்தீனியர்கள் மற்றும் பாலஸ்தீன ஆதரவு ஆர்வலர்களை நடத்தும் விதம் குறித்து அதிகரித்து வரும் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த சாட்சியம் வெளிவந்துள்ளது.

## பௌத்த ஒழுக்க விதி ... தொடர்ச்சி...

சட்டமே இறுதியானது என்பதை இந்த விளக்கம் புரிய வைத்துள்ளது.

ஆகவே, இலங்கையிலும் பௌத்த சங்க முறை விசாரணை என்பது மத ஒழுங்கு தொடர்பானது மாத்திரமே தவிர, அது இலங்கைத்தீவின் பொதுவான நீதிமன்ற விசாரணைகளுக்கு மாற்றீடாகவோ அல்லது குற்றவாளிகளைக் காப்பாற்றும் அரணாகவோ இருக்க முடியாது.

இதனை அனைத்துச் சிவில் சமூக அமைப்புகளும் வலியுறுத்த வேண்டும். ஏனெனில், பௌத்த சங்க முறையின் (Kathikawath) கீழ் விசாரணை நடத்தப்படும் என்ற அநுரவின் அறிவிப்பு, இலங்கையில் சட்ட ஆட்சி இல்லை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது.

கண்டி மகாநாயக்க தேரர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, பௌத்த சங்க விசாரணை முறைமையைக் கொண்டுவரவுள்ளதாக ஜனாதிபதி அநுர கூறியிருப்பது வேடிக்கையானது.

இந்த நகர்வானது, இலங்கை அரசியல் அமைப்பிற்கு உட்பட்ட நீதித்துறைக் கட்டமைப்பு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட பிரதான பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டத் துறை அதிகாரங்களைக் கேள்விக்கு உள்ளாக்கும்.

குற்றம் செய்தவர் ஒரு மதத் தலைவராக இருந்தாலும் சரி, சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி, நாட்டின் பொதுவான சட்டத்தின்படியும், குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரகாரமும் பொலிஸாரும் சிவில் நீதிமன்றங்களுமே விசாரிக்க வேண்டும்.

கதிகாவத்’ (Kathikawath) எனப்படும் பௌத்த குருமார் பின்பற்றுவதற்காகத் தங்களுக்குள் வகுத்துக் கொள்ளும் “மத ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிக் கோவை” என்பதற்கு அமைவாக மாத்திரம், இத்தகைய குற்றங்களை விசாரித்து முடிவு எடுக்க முடியாது.

இந்த நடைமுறை சமகால நவீன சட்ட முறைமைக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் முற்றிலும் முரணானதாகும். சட்டம் அனைவருக்கும் சமம் என்ற உலகப் பொது நீதியின் (Rule of Law) அடிப்படையில் இந்த விவகாரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

• • •

## கியூபா போரில் ... தொடர்ச்சி...

அத்தகைய ஒரு தாக்குதலில், JASSM குரூஸ் ஏவுகணைகள் மற்றும் JDAM துல்லியமாக வழிநடத்தப்படும் குண்டு களுடன் ஆயுதம் ஏந்திய B-1B, B-2, மற்றும் B-52H உள்ளிட்ட மூலோபாய குண்டுவீச்சு விமானங்கள் ஈடுபடுத்தப்பட வாய்ப்புள்ளது. விமானம் தாங்கி கப்பல்களில் இருந்து இயங்கும் F/A-18E/F சூப்பர் ஹார்னெட்கள் மற்றும் F-35C போர் விமானங்களுடன், விமானம் தாங்கி கப்பல் சார்ந்த விமானப் போக்குவரத்தும் ஒரு முக்கியப் பங்கு வகிக்கும். மின்னணுப் போர் மற்றும் ரேடார் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளை ஒடுக்குதல் ஆகியவை EA-18G கிரௌலர் விமானங்களால் கையாளப்படும்.

கியூபா எவ்வாறு பதிலளிக்க முடியும்? தீவின் வான் பாதுகாப்பு வலையமைப்பு, S-75 மற்றும் S-125 போன்ற பழமையான சோவியத் கால அமைப்புகளையே பெருமளவில் இன்னும் கொண்டுள்ளது; இருப்பினும், ஓரளவிற்கு நவீனமயமாக்கல் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. கையடக்க வான் பாதுகாப்பு அமைப்புகள் நிச்சயமாக விரிவாகப் பயன்படுத்தப்படும். தொடர்ச்சியான மின்னணு மற்றும் வான்வழித் தாக்குதல்களின் கீழ், கியூபப் படைகளால் ஒருங்கிணைப்பையும், நிகழ்நேர இலக்குப் பகிர்வையும் பராமரிக்க முடியுமா என்பதே முக்கியக் கேள்வியாக இருக்கும். அந்தச் சூழ்நிலைகளில், அமெரிக்காவின் வான்வழித் தாக்குதலுக்கு எதிராக வெற்றிகரமாகத் தற்காத்துக் கொள் வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு – ஆனால் முற்றிலும் இல்லாமல் போய்விடாது.

இருப்பினும், வாஷிங்டனுக்கு இந்தத் தேர்வு அவ்வளவு கவர்ச்சிகரமானதாக இருக்க வாய்ப்பில்லை. ஒரு அமைதியான இரகசியத் தாக்குதலைப் போலல்லாமல், ஒரு பெரிய அளவிலான குண்டுவீச்சுத் தாக்குதலை மறைப்பது சாத்தியமற்றது; மேலும் அது நிச்சயமாக மிகவும் தீவிரமான உலகளாவிய எதிர்ப்பைத் தூண்டும்.

### சூழ்நிலை 3: கடற்படை முற்றுகை மற்றும் பொருளாதார நெரிப்பு

மூன்றாவது சூழ்நிலை மிக நீண்ட காலத்திற்கு நீடிக்கும்: நேரடி இராணுவத் தலையீடு இல்லாமல் அரசியல் மாற்றத்தைக் கட்டாயப்படுத்தும் நோக்கில், கடற்படை முற்றுகையுடன் பொருளாதார அழுத்தமும் இணைக்கப்படும்.

நடைமுறையில், இந்த உத்தி ஏற்கெனவே தென்படுகின்றன. தீவிற்கு எரிபொருள் மற்றும் எரிசக்தி விநியோகங்களை வழங்க முயற்சிக்கும் கப்பல்களை இடைமறித்துத் தடுப்பது அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம். அமெரிக்காவின் பார்வையில், இந்த அணுகுமுறை விரும்பத்தக்கது, ஏனெனில் இதற்குப் பெரிய அளவிலான படைக்குவிப்பு தேவையில்லை மற்றும் விரைவான பதற்றம் அதிகரிப்பதற்கான அபாயங்களும் குறைவு.

பிரச்சனை என்னவென்றால், கியூபா பல தசாப்தங்களாக நடைமுறை முற்றுகையை ஒத்த சூழ்நிலைகளில் இயங்கி வருகிறது. கூடுதல் அழுத்தம் மட்டும் அர்த்தமுள்ள அரசியல் மாற்றத்தைத் தூண்டும் என்பது உறுதியாகத் தெரியவில்லை, அதாவது வாஷிங்டன் தனது மூலோபாய நோக்கங்களை அடைவதில் தோல்வியடையக்கூடும்.

### மற்ற சாத்தியமான சூழ்நிலைகள்

மற்ற சாத்தியக்கூறுகளையும் நிராகரிக்க முடியாது. உதாரணமாக, தீவில் ஏற்பட்ட கடுமையான நெருக்கடியால் நியாயப்படுத்தப்படும் ‘மனிதாபிமானத் தலையீடு’ என்று அழைக்கப்படுவது. பொதுமக்களைப் பாதுகாக்க ஐ.நா.வின் ஆணையை வாஷிங்டனால் எப்படியாவது பெற முடிந்தால், மனிதாபிமான உதவி என்ற பெயரில் அமெரிக்கப் படைகள் அங்கு வரக்கூடும்.

ஆனால், கியூபா மக்கள் எவ்வாறு எதிர்வினையாற்றுகிறார்கள் என்பதைப் பொறுத்தே பல விஷயங்கள் அமையும். பொதுமக்கள் அரசாங்கத்திற்குப் பின்னால் அணிதிரண்டால், ஒரு மனிதாபிமானப் பணியானது கொரில்லாப் படைகளுக்கு எதிரான ஒரு கிளர்ச்சி எதிர்ப்புப் பிரச்சாரமாக விரைவாக மாறி, ஒரு பரந்த பதற்ற அதிகரிப்பைத் தூண்டக்கூடும்.

முக்கிய மாறிகளில் ஒன்றாக சர்வதேச சமூகத்தின் - குறிப்பாக ரஷ்யா மற்றும் சீனாவின் - நிலைப்பாடு உள்ளது. கோட்பாட்டளவில், கியூபாவிற்கு எதிரான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் லத்தீன் அமெரிக்கா முழுவதும் ஒரு பரந்த அமெரிக்க எதிர்ப்பு உணர்வைத் தூண்டக்கூடும். மேலும், தீவில் ஒரு நீண்டகால இராணுவ நடவடிக்கையில் வாஷிங்டன் சிக்கிக்கொண்டால், அது நிச்சயமாக டிரம்ப் நிர்வாகத்திற்கு எதிராகவே ஒரு வலுவான உள்நாட்டு எதிர்ப்பை உருவாக்கும்.

ஈரான் நெருக்கடி இன்னும் தீர்க்கப்படாத நிலையில், அமெரிக்காவின் வாசலிலேயே மற்றொரு பெரிய புவிசார் அரசியல் தலைவலியை டிரம்ப் விரும்பமாட்டார். அவருக்குத் தேவையானது ஒரு விரைவான, தெளிவான, மற்றும் இரத்தம் சிந்தாத தீர்வு. அதனால், ஒரு அடையாளபூர்வமான இராஜதந்திரத் தீர்வு அல்லது ஒரு குறுகிய, கட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஆகியவையே மிகவும் சாத்தியமான விளைவாக அமைகின்றன.

தற்போதைக்கு, வரைபடங்களையும் நேரத்தையும் கண்காணிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**நன்றி: ரஸ்ய ருடே**

## மீளவும் போராடத் ... தொடர்ச்சி...

அக் கடிதத்தில் இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள கேப்பாப்புலவு மக்களின் காணிகளை விடுவிப்பதுதொடர்பில் சாதகமான பதில்கள் வழங்கப்படவில்லை. ஜனாதிபதி செயலகத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ள அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, முல்லைத்தீவு, கேப்பாப்புலவு பிரதேசத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை விடுவித்தல் தொடர்பில், அந்த பிரதேசத்தில் காணி உரிமையுடைய 55 பேரில் 44 பேர் மாற்று காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இணங்கியுள்ளதாகவும், அவர்களுக்கு கேப்பாப்புலவு மாதிரி கிராமத்தில் 40 பேர்ச்சஸ் வீதமான காணிகள், வீடுகள் மற்றும் பாடசாலை வசதிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 11 பேர் மாற்று காணி கள், வீடுகள் அல்லது அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை இணக்கம் தெரிவிக்காத காரணத்தினால், முகாமிற்கு சொந்தமான காணியின் இறுதி பகுதியிலிருந்து 6.75 ஏக்கர் ஒதுக்கப்பட்டு, இராணுவத்தின் தொழிலாளர் பங்களிப்புடன் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நிலப்பரப்பில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களின் பெறுமதி 538 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இருப்பதால், முகாமை இடமாற்றம் செய்வது அதிக செலவை ஏற்படுத்தும் என்றும், குறித்த காணியானது நந்திக்கடல் களப்பு சார்ந்த பிரதேசத்தில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், இராணுவத் தொடர்பாடல் முறைமைகளைப் பேணிச்செல்வதற்கும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், அதனைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வது அத்தியாவசியமானது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி மாற்று காணிகள், வீடுகள் அல்லது அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை இணக்கம் தெரிவிக்காத எஞ்சிய 11 பேருக்கு முகாமிற்கு சொந்தமான காணியின் இறுதி பகுதியிலிருந்து 6.75 ஏக்கர் ஒதுக்கப்பட்டு, இராணுவத்தின் தொழிலாளர் பங்களிப்புடன் வீடுகளை அமைத்துக் கொடுக்கக்கூடிய சாத்தியக்கூறு தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரின் ஊடாக வினவுதலை மேற்கொண்டு. இது தொடர்பாக பொருத்தமானவாறு அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வியாழக்கிழமை (28.05.2026) கேப்பாப்புலவு மக்கள் பிரதிநிதிகள் சிலரை முல்லைத்தீவு – கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள தனது மக்கள் தொடர்பகத்திற்கு அழைத்து இந்தவிடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைப்போல 44பேர் மாற்றுக்காணிகளைப் பெறுவதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என கேப்பாப்புலவு மக்கள் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்ததுடன், கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள 55பேருடைய காணிகளும் விடுவிக்கப்பட வேண்டுமென்ற தமது நிலைப்பாட்டினையும் தெரவித்தனர்.

அதேவேளை கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில், தமது கோரிக்கைகளையும், நிலைப்பாட்டையும் வெளிப்படுத்துவதற்கு எதிர்வரும் 03ஆம் திகதி இடம்பெறவுள்ள முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தனர்.

அத்தோடு இந்த கேப்பாப்புலவு காணி விடுவிப்புத்தொடர்பில் தொடர்ந்து பாராளுமன்றில் குரல் கொடுக்குமாறும் இதன்போது கேப்பாப்பிலவு மக்கள் பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஏழைகளின் பட்டியலில் ... தொடர்ச்சி...

இல்லாத, குறைந்த வருமானம் பெறும் ஏழை என்று நான் நினைக்கவில்லை” என்று அவர் பாராளுமன்றில் சாடியுள்ளார். அதேபோன்று, மஹிந்த ராஜபக்சவின் மனைவிக்கும் அப்போதைய ஆட்சிக் காலத்தில், பல கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தி ‘கால்டன் முன்பள்ளி’ என்று கூறப்படும் இடத்துக்கு மற்றொரு பெறுமதிமிக்க அரச நிலம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த நிலத்திற்கு மேலதிகமாக, அதனைச் சுற்றியிருந்த பொதுமக்களுக்குச் சொந்தமான மேலும் சில பகுதிகளும் அவர்களால் அத்துமீறிப் பலாத்காரமாகக் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுதத் பலகல்ல மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

## பறிபோகும் தமிழரின் ... தொடர்ச்சி...

காணமுடிகின்றது.

தமிழர்களின் பொருளாதார நிலைமைகள் என்பது நீண்டகால திட்டத்துடனும் நீண்டகால செயற்பாட்டுடனும் நன்கு கட்டமைக்கப்பட்டதாக முன்கொண்டு செல்லப் படவேண்டும்.இந்த நாட்டில் தமிழர்களின் பொருளாதார கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு எந்த சிங்கள அரசுகளும் முன்வராது.

முப்பது ஆண்டுகால யுத்தத்தினால் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பாரம்பரியமாக விவசாயம் மற்றும் மீன்பிடித்தலை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த தமிழ் மக்கள், தங்களின் விளைநிலங்களை இழந்து, பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இன்றுள்ள சூழலில், கிழக்கின் கிராமியப் பொருளாதாரத்தை, குறிப்பாக தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்குப் பாரம்பரிய விவசாய முறைகளுடன் மாற்று வர்த்தகப் பயிர்களை ஊக்குவிப்பது அவசியமாகிறது. அந்த வகையில், கிழக்கு மண்ணுக்கு மிகவும் உகந்த, சர்வதேச சந்தையில் அதிக தேவையுள்ள மரமுந்திரிகை செய்கையை ஒரு மூலோபாயப் பொருளாதாரத் திட்டமாக முன்னெடுப்பது திருப்புமுனையாக அமையும்.

மட்டக்களப்பின் படுவான்கரை மற்றும் வாகரைப் பகுதிகள், திருகோணமலையின் மூதூர் மற்றும் குச்சவெளிப் பகுதிகள், அம்பாறையின் திருக்கோவில், ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவுகளில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் கிராமப்புறங்களில் பரந்தளவிலான தரிசு நிலங்களும், மணற்பாங்கான உலர் வலயக் காணிகளும் காணப்படுகின்றன.

இங்கு நெற்பயிர்ச் செய்கைக்குத் அதிகளவிலான தண்ணீர் தேவைப்படும் நிலையில், வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய மரமுந்திரிகைச் செய்கை மிகக் குறைந்த பராமரிப்புடன் கூடிய சிறந்த மாற்றீடாகும். தமிழ் விவசாயிகள் தங்களிடம் உள்ள சிறிய மற்றும் நடுத்தர நிலங்களைப் பயன்படுத்தி இந்தச் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் தங்களின் நிரந்தர வருமானத்தை உறுதி செய்ய முடியும்.

தமிழர்களின் பொருளாதாரத்தை மரமுந்திரிகைச் செய்கை மூலம் வலுப்படுத்துவது வெறும் வருமான ஈட்டல் மட்டுமல்ல, அதற்கும் அப்பால் பல சமூக முக்கியத்துவங்களைக் கொண்டுள்ளது.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் தரிசாகக் கிடக்கும்போது, அவை திட்டமிட்ட குடியேற்றங்களுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் உள்ளாகும் அபாயம் அதிகம். அந்நிலங்களில் நிரந்தரப் பயிரான மரமுந்திரிகையை நடுவதன் மூலம் தமிழர்கள் தங்களின் நில உரிமையைப் பாதுகாக்க முடியும்.

உள்ளூரிலேயே லாபகரமான சுயதொழில் வாய்ப்புகள் மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புகள் உருவாகும்போது, தமிழ் இளைஞர்கள் கூலிகளாக கொழும்புக்கோ அல்லது மத்திய கிழக்கு நாடுகளுக்கோ இடம்பெயர்வது பெருமளவு குறையும். இன்று மரமுந்திரிகையினை நட்டு அதன் உற்பத்திகளை வேறுபகுதிகளுக்கு கொண்டுசெல்லப்பட்டு முடிவுப்பொருளாக மாற்றும் நிலைமையே காணப்படுகின்றது.

நாங்கள் தொழிற்சாலைகளை அமைத்து அதனை முடிவுப்பொருளாக மாற்றும்போது அதன் மூலம் பாரியளவிலான தொழில் முன்னேற்றங்களை பெறமுடியும். ஒரு சமூகம் அரசியல் ரீதியாகப் பலம்பெற வேண்டுமாயின், அச்சமூகம் பொருளாதார ரீதியாகத் தற்சார்பு உடையதாக மாற வேண்டும். மரமுந்திரிகைச் செய்கை கிழக்கின் தமிழ் சமூகத்திற்கு அந்தத் தற்சார்பை வழங்கக்கூடிய வல்லமையுள்ளதாகக் காணப்படுகின்றது..

கிழக்கு மாகாணத் தமிழர்களின் வரலாற்றில் மரமுந்திரிகைச் செய்கை என்பது வெறும் விவசாயப் பயிர் அல்ல. அது ஒரு கைவிடப்பட்ட பொருளாதாரப் புதையல். முறையான திட்டமிடல், உள்ளூர் கூட்டுறவு முயற்சிகள் மற்றும் புலம்பெயர் தமிழ் உறவுகளின் முதலீட்டுப் பங்களிப்பு ஆகியன ஒன்றிணையும் போது, கிழக்கில் தமிழர்களின் வாழ்வாதாரம் நிமிர்ந்து நிற்கும். யுத்த வடுக்களில் இருந்து மீண்டெழுந்து, ஒரு பலமிக்க, தற்சார்பான பொருளாதாரச் சமூகமாகத் தமிழர்கள் உருவெடுக்க இந்த "வெள்ளைத் தங்கம்" நிச்சயமாகப் பெருந்துணை புரியும்.இவற்றினை கருத்தில்கொண்டு திட்டமிடல்களை முன்னெடுப்பற்கு அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

• • •







## ஐக்கிய இராச்சியத்திலிருந்து... தொடர்ச்சி...

மே மாத தொடக்கத்தில், தொடர்ந்து ஐந்தாவது முறையாக 58 இடங்களை வென்று, ஸ்காட்லாந்து தேசியக் கட்சி ஸ்காட்லாந்து நாடாளுமன்றத்தில் மிகப்பெரிய அரசியல் சக்தியாக உருவெடுத்தது. பின்னர் ஸ்வினி, இந்தத் தேர்தல் முடிவுகள் சுதந்திரத்திற்கான கட்சியின் ஆதரவை உறுதிப்படுத்துவதாகக் கூறினார்.

2014 வாக்கெடுப்பின் முடிவால் சுதந்திர இயக்கம் ஓரளவிற்கு மட்டுமே பலவீனமடைந்தது. 2016-ல் பெரும் பாலான ஸ்காட்லாந்து வாக்காளர்கள் எதிர்த்த பிரெக் ஸிட்டிற்குப் பிறகு இது புத்துயிர் பெற்றது.

இந்த மாத தொடக்கத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், சுதந்திர ஆதரவு ஸ்காட்லாந்து தேசியக் கட்சியும் (SNP) ஸ்காட்லாந்து பசுமைக் கட்சியும் இணைந்து 129 உறுப்பினர்களைக் கொண்ட அவையில் 73 இடங்களை வென்றன. இதன் மூலம், பிரிட்டனைப் பிரிப்பதற்கு ஆதரவாக ஹோலிரூட்டில் இதுவரை இல்லாத மிகப்பெரிய கூட்டணியை உருவாக்கியுள்ளன.

புதிய சுதந்திரத்திற்கான பொது வாக்கெடுப்பை – பொதுவாக "இண்டிரெஃப்2" (indyref2) எனக் குறிப்பிடப் படுவது – அனுமதிக்கும் வகையில், டவுனிங் தெரு "1998 ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து சட்டத்தின் கீழ் ஒரு பிரிவு 30 உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்" என்ற முதல் அமைச்சர் ஜான் ஸ்வினியின் கோரிக்கைக்கு ஆதரவாக எம்.எஸ்.பி-க்கள் (MSPs) திங்களன்று(25) வாக்களித்தனர்.

## யாழ்ப்பாணம் எரிந்த இரவு ... தொடர்ச்சி...

மஞ்சத்திற்கும் தீமூட்டினார்கள். பாதுகாப்புக் கொட்டகையிருந்தமையால் இவை தப்பின. கோவிலருகே இருந்த வீடுகள், கடைகள் அடித்து சேதமாக்கப் பட்டதோடு வேலிகள், கதவுகள், யன்னல்கள், அலுமாரிகள் தீவைத்தும் கொழுத்தப்பட்டன. இச்சம்பவம் யாழ்நகரத்திலும், சுண்ணாகத்திலும் தொடர்ந்தது.

**(விபரமாக அறிவதற்கு மீண்டும் யாழப்பாணம் எரிகிறது நூலைப் பார்க்கவும்)**

## எபோலாவால் 220... தொடர்ச்சி...

பாதிக்கப்பட்ட உடனடிப் பகுதிக்கு அப்பால், காங்கோ ஜனநாயகக் குடியரசு, உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளின் குடியிருப்பாளர்கள் நாட்டிற்குள் நுழைவதற்கு கனடாவும் பஹாமாஸும் தற்காலிகமாகத் தடை விதிப்பதாகக் கூறியுள்ளன. அந்த நாடுகளின் குடியிருப்பாளர்கள் புதன்கிழமை(27) முதல் 90 நாட்களுக்கு கனடாவிற்குப் பயணம் செய்ய முடியாது என்று அரசாங்கம் கூறியுள்ளது. சமீப வாரங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்த கனடிய குடிமக்கள், நிரந்தர குடியிருப்பாளர்கள் மற்றும் பிற வெளிநாட்டினர், அறிகுறிகள் தென்படாவிட்டாலும், மே 30 முதல் 21 நாட்களுக்குத் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கனடாவின் பொது சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

நுழைவுக் கட்டுப்பாடுகள் உடனடியாக அமுலுக்கு வரும் என்றும், கரீபியன் நாட்டின் சுகாதார அமைச்சகத்தின் மறுஆய்வுக்கு உட்பட்டு 30 நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் பஹாமாஸ் அரசாங்கம் கூறியுள்ளது.

## மாகாண சபை தேர்தல்... தொடர்ச்சி...

இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்த நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வருகின்றனர்.

இந்த நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத சூழலில் காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது கறுப்புக் கொடிகளைக் கைகளில் ஏந்தியவாறு பலாலி சந்தி வரை பேரணியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வலி வடக்கு பிரதேச சபையின் தவிசாளர், வலி தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பங்குபற்றியிருந்தனர்.

இதேவேளை அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் வலிகாமம் பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை பார்வையிட்டிருந்தார்.

இவ்வாறு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்னிலங்கைத் ... தொடர்ச்சி...

சுட்டிக்காட்டுகிறது.

45 தோட்டங்களில் 27 தோட்டங்களில் தொழிலாளர்கள் தினமும் 25 கிலோகிராமுக்கும் அதிகமான தேயிலை இலைகளைப் பறிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக தெரிவித்துள்ளனர். இந்த இலக்கை அடைய முடியாவிட்டால், ஊதியம் குறைக்கப்படுவது மட்டுமல்லாமல் சில நேரங்களில் பல நாட்களின் வேலை ஒரு நாளாகவே கணக்கிடப்படுவதாக தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். “எங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை முடிக்கவில்லை என்றால் மூன்று நாட்கள் வேலை செய்ததையும் ஒரு நாள் வேலை என்று மட்டும் கணக்கிடுவார்கள்.

வேலை முடித்தாலும் ஆயிரம் ரூபாய் மட்டுமே தருவார்கள்.” என்று அங்குள்ள தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையின் தற்போதைய பொருளாதார சூழலில் ஒரு குடும்பம் வாழ்வதற்கு இந்த வருமானம் போதாதது தெளிவாகும். குறைந்த சம்பளம், அதை வழங்குவதில் தாமதம் மற்றும் தேவையற்ற கழிவுகள் காரணமாக தொழிலாளர்கள் அடிப்படை தேவைகளுக்குக் கூட கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை யில் தள்ளப்படுகின்றனர். இந்த கடன்கள் பெரும்பாலும் தோட்ட நிர்வாகம் அல்லது அதனுடன் தொடர்புடையவர் களிடமிருந்தே பெறப்படுகின்றன. இதனால் தொழிலாளர்கள் கடன் சுழற்சியில் சிக்கிக் கொள்கின்றனர்.

இந்த நிலைமையை “Debt Bondage” எனப்படும் கடன் அடிமைத்தனத்தின் ஒரு வடிவமாக சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிடுகிறது. சில குடும்பங்கள் தலைமுறைகளாக அதே தோட்டத்தில் கடன் காரணமாக வேலை செய்து வருவதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. இது நவீன கால அடிமைத்தனத்தின் ஒரு வடிவம் என மனித உரிமை ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். 22 தோட்டங்களில் தொழிலாளர்கள் தங்கள் சுதந்திரமான நடமாட்டமே கட்டுப்படுத்தப்படுவதாக தெரிவித்துள்ளனர். சில இடங்களில் இரவு நேரக் கட்டுப்பாடுகள் இருந்ததாகவும், வெளியூர் செல்ல நிர்வாகத்தின் அனுமதி தேவைப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இது ஒரு சாதாரண தொழிலாளர், தொழில்துறை உறவைத் தாண்டி, முழுமை யான கட்டுப்பாட்டை நோக்கி நகரும் ஒடுக்குமுறை அமைப்பை வெளிப்படுத்துகிறது. அதேநேரம், மலையகத் தொழிலாளர்கள் வசிக்கும் “லயன் வீடுகள்” குறித்து பல ஆண்டுகளாகவே விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. ஆனால் நிலைமை இன்னும் பெரிதாக மாறவில்லை. சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆய்வின்படி, அந்த மக்களுக்கு போதிய இடவசதி இல்லை, பாதுகாப்பான குடிநீர் வசதி இல்லை, சுகாதார கழிப்பறைகள் இல்லை, தனியுரிமை இல்லை மற்றும் சட்டபூர்வ குடியிருப்பு பாதுகாப்பு இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பல தொழிலாளர்கள் “வேலையை இழந்தால் வீடும் இழக்க வேண்டியிருக்கும்” என்ற அச்சத்துடன் வாழ்வதாக தெரிவித்துள்ளனர். இதேவேளை, இலங்கையில் தொழிலாளர்களை பாதுகாக்க பல சட்டங்கள் உள்ளன. ஆனால் அவை தனியார் தோட்டங்களில் நடைமுறையில் அமுல்படுத்தப்படவில்லை என்று அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது. முக்கியமாக, பல தொழிலாளர்கள் “நிரந்தர ஊழியர்கள்” என்ற நிலையில் இல்லாமல், “தற்காலிக தொழிலாளர்கள்” என்று வகைப்படுத்தப்படுகின்றனர்.


இதன் மூலம் ஓய்வூதியம், மருத்துவ விடுப்பு மகப்பேறு நலன், சமூகப் பாதுகாப்பு மற்றும் நிரந்தர ஊதிய உரிமை போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இது திட்டமிட்ட சட்ட துஷ்பிரயோகம் என மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. ஆய்வு செய்யப்பட்ட தோட்டங்களில் பெரும்பாலான இடங்களில் தொழிற்சங்கங்கள் செயல்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது. சில இடங்களில் தொழிற்சங்க அமைப்புகளை நிர்வாகம் நேரடியாகத் தடுத்ததாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். தொழிற்சங்கங்கள் இல்லாததால் ஊதிய பேச்சுவார்த்தை நடத்த முடியாது. தொழிலாளர் உரிமை மீறல்களை எதிர்க்க முடியாது. சட்ட உதவி பெற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

### மொழி தடையும் நீதியின்மையும்

மலையகத் தமிழர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று மொழி தடையாகும். பல அரசு அதிகாரிகள் மலையகத் தமிழ் வழக்காற்றை புரிந்துகொள்ள முடியாததால் தொழிலாளர்கள் தங்கள் பிரச்சினைகளை முறையாக விளக்க முடியாமல் போகிறது. வேலை ஆவணங்கள் இல்லாமை, காவல்துறையில் பாகுபாடு, நிர்வாக அலட்சியம் மற்றும் நீதிமன்ற அணுகல் சிரமம் போன்ற காரணங்களால் அவர்கள் நீதியை அடைவது மிகவும் கடினமாகியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. இதில் “அரசின் தோல்வி தெளிவாக தெரிகிறது” என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் ஸ்மிருதி சிங் தெரிவித்துள்ளார். “இலங்கை-யின் தனியார் தேயிலைத் தோட்டங்கள், மலையகத் தமிழ் தொழிலாளர்களை நடத்தும் விதத்தில் தொழிலாளர் சட்டங்களை முறையாக மீறுகின்றன. வன்முறை, கடன் அடிமைத்தனம், சம்பள மோசடி, மோசமான குடியிருப்பு மற்றும் வேலை சூழல் ஆகியவை கட்டாயத் தொழிலின் ஆபத்தான அறிகுறிகளாக உள்ளன.” “இலங்கை உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களின் கீழ் கட்டாயத் தொழிலை ஒழிக்க வேண்டிய கடமையுடைய நாடாகும். அரசு உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக்கூறலை உறுதி செய்ய வேண்டும்.” என்று அவர் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். இலங்கை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்பினராக மட்டுமல்லாமல், அதன் 44 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ள நாடாகவும் உள்ளது. மேலும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான ஐ.நா. உடன்படிக்கைகளும் கையொப்பமிட்டுள்ளது. இதனால் இலங்கை அரசுக்கு கட்டாயத் தொழிலைத் தடுப்பதற்கும், இன அடிப்படையிலான பாகுபாட்டை ஒழிப்பதற்கும், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. உலக சந்தையில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு தேயிலைப் பொதிக்கும் பின்னாலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வியர்வை இருக்கிறது. ஆனால் அந்த உழைப்புக்கு உரிய மரியாதையோ, பாதுகாப்போ, மனித உரிமையோ வழங்கப்படவில்லை என்பது இந்த அறிக்கையின் ஊடாக வெளிப்படுத்தப்படும் செய்தியாகும். சர்வதேச நிறுவனங்கள் “நெறிமுறை வணிகம்”, “நிலைத்தன்மை”, “நியாயமான வர்த்தகம்” போன்ற சொற்களை பயன்படுத்தினாலும், நிலத்தின் அடிப்படையில் தொழிலாளர்களின் வாழ்க்கை இன்னும் காலனித்துவ கால நினைவுகளைப் போல் தொடர்கிறது என்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழிலாளர் அமைப்புகள் பல முக்கிய பரிந்துரைகளை முன்வைக்கின்றன. குறிப்பாக அனைத்து தனியார் தோட்டங்களிலும் சுயாதீன தொழிலாளர் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். தற்காலிக தொழிலாளர் என்ற பெயரில் நடைபெறும் சுரண்டலை நிறுத்த வேண்டும். தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் அல்ல, வாழ்வதற்கு போதுமான ஊதியம் வழங்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் வேலைக்கு இணைக்கப்பட்ட குடியிருப்பு முறையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். தொழிற்சங்க அமைப்புகளைத் தடுக்கின்ற தோட்ட நிர்வாகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். மலையகப் பகுதிகளில் அரசின் நேரடி முதலீடு அதிகரிக்கப்பட வேண்டும் போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் தேயிலைத் தொழில் நாட்டின் பெருமையாக விளம்பரப்படுத்தப்பட்டாலும், அதன் அடித்தளத்தில் வாழும் மலையகத் தமிழர்களின் வாழ்க்கை இன்னும் பாதுகாப்பற்ற நிலையில், சுரண்டலின் கீழ் தள்ளப்பட்டதாகவே உள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை ஒரு சாதாரண மனித உரிமை ஆவணம் அல்ல. ஒரு தேசம் உலக சந்தையில் உயர்ந்த தரமான தேயிலையை விற்பனை செய்வதற்கு முன், அந்த தேயிலையைப் பறிக்கும் தொழிலாளர்களின் மனித கண்ணியத்தை பாதுகாக்கத் தயாரா? என்ற கேள்வியை முன்வைக்கிறது.

• • •








## அவுஸ்ரேலியாவில்... தொடர்ச்சி...

ஆயுதங்களைத் தன்வசம் வைத்திருக்கத் தயாராகி வருகின்றன,” என்று ரஷ்யா-ஆசியான் பாதுகாப்புக் கூட்டத்தில் ஷோய்கு கூறினார். “அவுஸ்ரேலியாவின் AUKUS கூட்டாண்மையில் பங்கேற்பதன் காரணமாக, அத்தகைய ஆயுதங்கள் அதன் மண்ணிலும் வந்து சேரக்கூடும்.”

கான்பெரா 2021-ல் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்துடன் AUKUS பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இணைந்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், வர்ஜீனியா வகை நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரித்து இயக்குவதற்குத் தேவையான அணுசக்தி தொழில்நுட்பத்தை அவுஸ்ரேலிய கடற்படைக்கு வழங்க அமெரிக்கா ஒப்புக்கொண்டது. அணு சக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைத் தாங்கள் வாங்குவது அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை மீறவில்லை என்று அவுஸ்ரேலிய நீர்மூழ்கிக் கப்பல் முகாமை வாதிடுகிறது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



இ.ஜோயல்
செல்வநாயகபுரம், திருகோணமலை

## “தனிமையின் தவம்”

கூட்ட நெரிசலில் தொலைந்த யான்,
கூடொன்று தேடி தனித்து நின்றேன்.
ஆரவாரம் அடங்கிய இவ்வேளையில்,
ஆத்மாவின் ராகம் கேட்கின்றேன்.

இங்கு வார்த்தைகள் ஏதும்
தேவையில்லை,
மௌனமே மொழியாய் மாறுகின்றது.
நிழலும் நிஜமும் கைகோர்க்கும்
வேளையில்,
நினைவுகள் மெதுவாய் பேசுகின்றன.

சுமந்த வலிகள் கரைந்து போக,
சுயத்தை அறியும் தருணமிது.
உலகப் பாசங்கள் ஓய்வெடுக்க,
உள்ளம் தவம் செய்யும் நேரமிது.

பாசாங்கு மனிதரின் நிழல்கள்
இல்லை,
பகட்டுப் பேச்சுகளின் சத்தமில்லை.
தனிமை என்பது சாபமல்ல,
தன்னை உணரும் ஞான எல்லை!

-மு.சந்தியா-
திருகோணமலை

## டெவில் தேனீ / Megachile lucifer



- 2025-ல் மேற்கு ஆஸ்திரேலியாவின் Goldfields பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது, பெண் தேனீயின் முகத்தில் சிறிய கொம்பு போன்ற அமைப்புகள் காணப்படுவதால் “டெவில் தேனீ” என்று அழைக்கப்படுகிறது. அழிந்து வரும் காட்டுப் பூவான Marianthus aquilonarius-ஐ பார்வையிடும்போது கண்டுபிடிக்கப்பட்டது.
- 20 வருடங்களுக்குப் பிறகு இந்த வகை தேனீ குழுவில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் புதிய இனம் இதுதான்.
- இது ஒரு தனி வாழ்கை வாழும் தேனீ. தேன் சேமிக்காது.
- ஆனால் இது அழிந்து வரும் தாவரங்களுக்கு மகரந்தச் சேர்க்கை செய்கிறது.



-சு.திகழினி-
கன்னியா திருகோணமலை



சி.கிருத்திகா
3 ஆம் கட்டை, திருகோணமலை


Camera

# தாயகமும் வாழ்வும்




NAFSO
மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், முல்லைத்தீவு
District Fisheries Solidarity Movement, Mullaithevu


SAY NO TO DRUGS
No Smoking
SAY NO TO DRUGS
CLUB
Quit Tobacco